Registered as Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 122 | திங்கட்கிழமை 28 மார்ச் 2022 | பங்குனி 14 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 விலை : ரூ.30

## ரணிலுக்கு மசியும் ராஜபக்ச அரசு

கொழும்பு, மார்ச் 28
சர்வதேச நாணய நிதியம் இலங்கை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையை நாடாளுமன்றில் முன்வைத்து விவாதம் நடத்துவதற்கு முன்னாள் பிரதமர் 15 ▶

## கூட்டமைப்பையும் சந்திக்கிறார் இந்திய வெளிவிவகார அமைச்சர்

யாழ்ப்பாணம், மார்ச் 28
இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கருக்கும், இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் இன்று நடைபெறவுள்ளது.
இலங்கையில் நடைபெறவுள்ள 'பிம்ஸ்டெக்' மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் இன்று காலை கொழும்பு வரவுள்ளார். இந்தப் பயணத்தின்போது தமிழ்த் தேசியக் கூட்ட 15 ▶

## இடைக்கால அரசாங்கத்தை– பொறுப்பேற்க கோரினால் பரிசீலனை செய்யத் தயார்!!!

### ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு



கொழும்பு, மார்ச் 28
இடைக்கால அரசாங்கம் தொடர்பாகவோ அதைப் பொறுப்பேற்பது தொடர்பிலோ அரச தரப்பில் இருந்து நேரடியாக என்னுடன் யாரும், எதுவும் பேசவில்லை. அவ்வாறான வேண்டுதல்கள் முன்வைக்கப்பட்டால் பரிசீலித்து முடிவெடுப்பேன். நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் எதையும் செய் 15 ▶

## எரிவாயுவை அதிக விலையில் விற்றால் தகவல் தாருங்கள்!

கொழும்பு, மார்ச் 28
லிட்ரோ சமையல் எரிவாயுவை அதிகரித்த விலையில் விற்பனை செய்யும் முகவர்கள் தொடர்பில் 15 ▶

# புலம்பெயர் தமிழர்கள் மீதான தடைகள் விரைவில் விலகும்?

### மீள்பரிசீலனை செய்வதாக அரசு அறிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 28
புலம்பெயர் தமிழர்கள் மற்றும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகள் மீள்பரிசீலனை செய்யப்படும் என்று இலங்கை அரசு நேற்றிரவு அறிவித்துள்ளது. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். 15 ▶

## ஏப். 5 தொடக்கம் வெப்பம் உச்சம்

கொழும்பு, மார்ச் 28
தற்போது நிலவும் அதிக வெப்பத்துடனான வானிலை எதிர்வரும் ஏப்ரல் மாதத்தின் நடுப்பகுதி வரை தொடரக்கூடும் 15 ▶

## பொலிஸ் உத்தியோகத்தரின் வீட்டைத் தாக்கிய கும்பல்

யாழ்ப்பாணம், மார்ச் 28
பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் வீடு நேற்று மதியம் தாக்குதலுக்குள்ளாகியுள் 15 ▶

## கலாசார மண்டபம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28
இந்திய அரசால் யாழ்ப்பாணம் பொதுநூலகத்துக்கு அண்மையில் அமைக்கப்பட்ட கலாசார மண்டபத்தை, பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் ஆகியோர் இணைந்து இணையம் ஊடாகத் திறந்து வைக்கவுள்ளனர். இந்த நிகழ்வு இன்று மதி 15 ▶

## அரைகுறை அரசியல் தீர்வை எப்போதும் ஏற்கப்போவதில்லை

### ஜனாதிபதிக்கு தெளிவாகவே எடுத்துரைத்தோம் தொடர்ந்தும் பேச்சு நடத்துவோம் என்கிறார் சம்பந்தன்



யாழ்ப்பாணம், மார்ச் 28
அரைகுறையான அரசியல் தீர்வை நாங்கள் ஒருபோதும் ஏற்கவேமாட்டோம். இதை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் நேரில் எடுத்துரைத்தோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நேற் 11 ▶




## விபத்தில் காயமடைந்தவர் மருத்துவமனையில் சாவு!



கொடிகாமம், மார்ச் 28
துவிச்சக்கரவண்டியில் சென்றவரை பின்னால் சென்ற மோட்டார் சைக்கிள் மோதியதில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த குடும் 11 ▶

## இனந்தெரியாதோர் துரத்திய இளைஞனைக் காணவில்லை

### அச்சுவேலி பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 28
மின்சாரம் தடைப்பட்ட நேரத்தில் வீட்டு வளவுக்குள் வந்தவர்கள் துரத்திச் சென்ற இளைஞனைக் காணவில்லை என்று அவரது உறவினர்களால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம், யாழ்ப்பாணம், புத்தூர் மேற்கு, 11 ▶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபாய நிலைமையில் சோழமண்டல குளம்!

**மன்னார், மார்ச் 22**

**சட்டவிரோத மணல் அகழ்வால் மன்னார், இலுப்பைக்கடவை, சோழமண்டலகுளம் உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.**



இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்குப் பல தடவைகள் அறிவித்துள்ளபோதும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மாந்தை மேற்குப் பிரதேசசபை உறுப்பினர் விஜயபாண்டி குற்றஞ்சாட்டுகிறார்.

முதலியார் கமம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட இலுப்பைக்கடவை ஆற்றுப் பகுதியில் பல ஆண்டுகளாக சட்டவிரோத மணல் அகழ்வு நடைபெறுகின்றது.

அகழப்படும் மண் கனரக வாகனங்கள் மூலம் அணைக்கட்டு வழியாகக் கொண்டு செல்லப்படுகின்றது. அதனால் குளம் உடைபெடுக்கும் அபாயம் காணப்படுகின்றது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

'இந்தக் குளம் சுமார் ஆயிரத்து 500 ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய நிலங்களுக்கு ஆதாரமாக இருக்கின்றது. இந்தக் குளம் உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்பட்டிருக்கின்றது. பொதுமக்கள் பயன்படுத்தும் வீதியும் முற்றாக சேதடைந்துள்ள நிலையில், மழைகாலங்களில் மோட்டார் சைக்கிள், சைக்கிள்கள் கூட பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. இது தொடர்பாகப் பல தடவைகள் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை' என்று பிரதேசசபை உறுப்பினர் விஜயபாண்டி மேலும் தெரிவித்தார். (எ-213)

## சிங்கராஜ வனத்தில் உயிர்கடத்தலில் ஈடுபட்ட ஜேர்மனியர் இருவர் கைது

கொழும்பு,மார்ச் 28

சிங்கராஜ வனத்தில் உள்ள உயிரினங்கள் மற்றும் தாவரங்கள் உள்ளிட்ட அரிய உயிரினங்களை, இரகசியமாகக் கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் இரண்டு ஜேர்மனியர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சிங்கராஜ வனத்தின் பாதுகாப்பு அதிகாரிகளின் உதவியுடன், தெனியாய விஹாரஹேன குருலுகலப் பிரதேசத்தில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட நபர்களிடம், உயிரினங்களைப் பிடிக்கப் பயன்படுத்தும் உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றினர். (ம-4-இ)

## மசகு எண்ணெய் விலை உயர்வு

கொழும்பு, மார்ச் 28

உலகச் சந்தையில் மசகு எண்ணெய் விலை மீண்டும் கடுமையாக உயர்ந்துள்ளது.

ரஷ்யாவின எண்ணெய் மற்றும் எரிவாயு மீது மேற்கத்தேய நாடுகள் விதித்துள்ள தடை மற்றும் சவுதி அரேபியாவில் உள்ள எண்ணெய்க் கிடங்கு மீதான தாக்குதல் என்பவற்றால் இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. (ம-4-இ)

## கூட்டுறவுச் சங்கங்களில் கள் உற்பத்தி ஆரம்பம்

*வெளிநாட்டு ஏற்றுமதிக்கும் வாய்ப்பு*

சாவகச்சேரி, மார்ச் 28

யாழ். மாவட்டத்தில் பனம் கள் உற்பத்தி அதிகரித்துவரும் நிலையில் போத்தல் கள் உற்பத்தியை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த வாரம் ஆரம்பித்துள்ளன. இந்த வருடம் வெளிநாட்டு ஏற்றுமதிக்கு சாத்தியம் உள்ளது என்றும் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

அண்மையில் யாழ்ப்பாணம் வருகைதந்த மத்திய அமைச்சர், பனை உற்பத்திப் பொருள்கள் மற்றும் பனை வெல்லம், போத்தல் கள் ஆகியவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்பைப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்திருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே மேற்படி உற்பத்திகளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த வாரம் ஆரம்பித்துள்ளன. (ம-14-9)

## தீவனங்கள் விலை உயர்வால் பண்ணையாளர்கள் பாதிப்பு!

கிளிநொச்சி, மார்ச் 28

கால்நடைகளுக்கான தீவனங்களின் விலைகள் அதிகரித்துள்ளதால், பண்ணையாளர்கள் கடும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

கால்நடைகளுக்கான தீவனங்களின் விலைகள் இருமடங்காக அதிகரித்துள்ளன என்றும், ஆயினும் உற்பத்திப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பாலுக்கான விலையை அதிகரிக்காதுவிட்டால் பண்ணைகளைத் தொடர்ந்து செயற்படுத்த முடியாத நிலைமை தோன்றும் என்று பண்ணையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதிகாரிகள் இதைக் கருத்திற்கொண்டு பாலுக்குப் புதிய விலையை நிர்ணயிக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-113)

## ஹெரோய்னுடன் ஒருவர் கைது

சாவகச்சேரி, மார்ச் 28

520 மில்லிகிராம் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இளைஞரை, விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.

சாவகச்சேரி மதுவரி நிலையத்துக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் மாலை அல்லாரை தெற்குப் பகுதியில் 23 வயது இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

அவரிடம் இருந்து 520 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது என்று மதுவரி நிலையத்தினர் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, அவரை எதிர்வரும் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. (எ-9)

## தவசிகுளம் பகுதியில் மரக்கடத்தல் முறியடிப்பு



வவுனியா, மார்ச் 28

வவுனியா - தவசிகுளம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கடத்தப்பட்ட முதிரைமரக் குற்றிகள் மீட்கப்பட்டுள்ளன.

சிறப்பு அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலையடுத்து நேற்றுமுன்தினம் மேற்கொண்ட நடவடிக்கையிலேயே மேற்படி மரக்குற்றிகள் மீட்கப்பட்டன.

மரக்குற்றிகளைக் கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் ஓமந்தை, கூமாங்குளம், தோணிக்கல் பகுதியைச் சேர்ந்தவர்கள். மணல் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம், கடத்தப்பட்ட மரக்குற்றிகள் என்பன நெளுக்குளம் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டன. (ம-110)



## வெங்காய வெடியை உண்ட யானை உணவு உட்கொள்ள முடியாமல் தவிப்பு

*வவுனியாவில் சம்பவம்*

வவுனியா, மார்ச் 28

வவுனியாவில் வெங்காய வெடியை உட்கொண்டதனால் உணவை உட்கொள்ள முடியாமல் யானைக் குட்டியொன்று பரிதவித்து வருகின்றது. வவுனியா, ஆச்சிபுரம் பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த யானையால் அந்தப் பகுதியில் வசிக்கும் மக்களின் உயிர்களுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.


இதையடுத்து வனஉயிரிகள் திணைக்களத்துக்குத் தகவல் வழங்கப்பட்டு, யானையை மீண்டும் காட்டுக்குள் செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் வடமாகாண கால்நடை மருத்துவர் கிரிதரனுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற வடமாகாண மருத்துவர் கிரிதரன் தலைமையிலான குழுவினர், வெங்காய வெடியை உட்கொண்டதாலேயே யானைக் குட்டி உணவருந்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தனர். (ம-20,110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடாந்தம் குடும்ப வன்முறைகளால் 100,000 முறைப்பாடுகள்!

**கொழும்பு, மார்ச் 28**

**குடும்ப வன்முறைகள் தொடர்பில் ஒவ்வொரு வருடமும் சராசரியாக ஒரு லட்சம் முறைப்பாடுகள், பொலிஸ் திணைக்களத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவில் பதிவாகின்றன என்று அந்தப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரேணுகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.**




அவர் மேலும் தெரிவித்ததாவது:- நாட்டில் சுமார் 600க்கும் மேற்பட்ட பொலிஸ் நிலையங்கள் இயங்கி வருகின்றன.

இவை அனைத்திலுமே சிறுவர் மற்றும் மகளிர் பிரிவுகள் உள்ளன. இங்கு மாமியார், மருமகள் பிரச்சினைகள், கணவன் போதைப் பொருளுக்கு அடிமையாதல் போன்ற சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸ் நிலையங்களில் தினமும் முறைப்பாடுகளை வழங்குகின்றனர்.

குறிப்பாக தகாத தொடர்புகள் தொடர்பில் அதிகளவில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

குடும்ப வன்முறைகள் காரணமாக குடும்ப உறவுகளில் நாளுக்கு நாள் விரிசல் நிலை ஏற்படும் ஆபத்து உருவாகியுள்ளது. சமூக ஊடகச் செயற்பாடுகள் காரணமாகவும் குடும்ப வன்முறைகள் ஏற்படுகின்றன-என்றார். (ம-4-இ)

## நங்கூரங்கள் திருட்டு கடற்படை சிப்பாய் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 28

மாதகல் கடற்கரையில், படகுகளின் நங்கூரங்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் மாதகல் லூர்து மாதா கோயிலுக்கு அருகில் உள்ள கடற்கரைப் பகுதியில் தரித்து விடப்படும் படகுகளின் நங்கூரங்கள், பட்டா ரக வாகனத்தில் ஏற்றிச் செல்லப்படுவதை அந்தப் பகுதி மக்கள் அவதானித்துள்ளனர். இளவாலைப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்து, நங்கூரமேற்றிய வாகனம் மடக்கிப் பிடிக்கப்பட்டது. சந்தேகநபர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் மேற்படி சிப்பாய் ஒருவர் நங்கூரங்கள் திருடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளமை தெரியவந்துள்ளது. (ம-4-125)



## கட்டுப்பாட்டை இழந்த பிக்கப் கடையுடன் மோதுண்டு விபத்து

பளை, மார்ச் 28

வேகக்கட்டுப்பாட்டை இழந்த பிக்கப் ரக வாகனம், கடையொன்றுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது. இந்த விபத்து பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பளை நகரப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

விபத்தில் கடைத்தொகுதியின் ஒரு பகுதி முற்றாகச் சேதமடைந்தது. விபத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-4-27)



## போதைப்பொருள் குற்றச்சாட்டு: 132 இலங்கையர்களுக்கு சர்வதேசக் கண்காணிப்பு

கொழும்பு, மார்ச் 28

போதைப்பொருள் குற்றச்சாட்டுக்களுடன், வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ள 132 பேருக்கு எதிராக சர்வதேச பொலிஸார் (இன்டர்போல்) சிவப்பு அறிவித்தல் விடுத்துள்ளனர் என்று சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவர்களில் பெரும்பாலானோர் தற்போது டுபாயில் இருப்பது தெரியவந்துள்ளது. கடந்த வருடம் போதைப் பொருள் நடவடிக்கைகளின்போது 95 ஆயிரம் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் ஆயிரத்து 630 கிலோகிராம் ஹெரோய்ன், 15 ஆயிரம் கிலோகிராம் கஞ்சா மற்றும் ஆயிரத்து 377 கிலோகிராம் இதர போதைப் பொருள்கள் என்பனவும் மீட்கப்பட்டன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

## கட்டுக்கரை குளத்தின்கீழ் 1,850 ஏக்கரில் சிறுபோகம்!

மன்னார், மார்ச் 27

மன்னார் கட்டுக்கரைக் குளத்தின் கீழாக ஆயிரத்து 850 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிறுபோகம் தொடர்பான முன்னேற்பாட்டுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் 18 ஏக்கர் பெரும்போகம் செய்த ஒருவருக்கு ஒரு ஏக்கர் அளவில் சிறுபோக நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. 2 ஆயிரம் ஏக்கரில் மேட்டு நிலப்பயிர்களாக உளுந்து, பயறு, கடலை, கௌபி போன்றவற்றைப் பயிரிடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கட்டுக்கரைக் குளத்தில் 16 ஆயிரத்து 500 ஏக்கர் விவசாயத்துக்குத் தேவையான 8.3 அடி நீர் இருப்பதால், அடாத்துப் பயிர்ச் செய்கைக்கு முற்றுமுழுதாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது என்று மன்னார் நீர்ப்பாசனப் பணிப்பாளர் சிவராசா யோகராசா தெரிவித்துள்ளார். (ம-4-213)




உழைக்கிறவன் ஆரோ, அனுபவிக்கிறவன் வேறாரோ எண்டு சொல்லுவினம். அப்பிடித்தான் இப்ப கனஇடங்களில நடக்குது. இண்டைக்கு அப்பிடி நோகாமல் நொங்கு குடிக்கிறவையைப் பற்றிச் சொல்லவேணும். உந்த மதுவரித் திணைக்களம் (கலால்) இருக்குத்தானே, அவைதான் இஞ்சையுள்ள கள்ளுச் சீவுறதுக்கும், தவறணை நடத்திறதுக்கும் லைசென்ஸ் குடுக்க வேணும். அவையின்ர தயவு இல்லாமல் கள்ளுச் சீவவோ, தவறணை நடத்தவோ முடியாது. இதைச் சாட்டா வைச்சுக்கொண்டு, அநேகமான கலால்காரர் தங்கட இஷ்டத்துக்கு காசு கேட்டு, தவறணையை நடத்திற சங்கங்களை ஆய்க்கினை பண்ணுவினமாம். அப்பிடி அவை ஒருவேளை காசு குடுக்காட்டி, பிறகு இவை தங்கட வேலையைக் காட்டுவினம். தவறணைக்கு போய், அங்க கள்ளில இலையான் விழுந்திருக்கு, குப்பை கிடக்கு எண்டு ஏதோ ஒரு சாட்டைச் சொல்லி அந்தத் தவறணைக்கு 'சீல்' வைச்சிடுவினம். பிறகு அதைத் திறக்க வைக்கிறதுக்குள்ள பெரும்பாடாயிடும். இப்பிடி தவறணைகள் பூட்டிக் கிடக்கிற நாள்களில சங்கத்தின்ர வியாபாரம் அவுட். கள்ளுச் சீவிக் குடுக்கிறவையின்ர வாழ்வாதாரமும் அவ்வளவு நாளும் அடிபட்டிடும். ஆனால் அதைப் பற்றியெல்லாம் இந்தக் கலால்காரருக்கு கவலையில்லை. தங்கட பொக்கற் நிரம்பினால் அவைக்கு காணும். இப்பிடி வீணா முட்டுப்பட்டு வியாபாரத்தையும் கெடுத்து, சீவல் தொழிலாளர்களின்ர வாழ்க்கையையும் நாசமாக்காமல் இருக்கிறதுக்காக கலால்காரர் வரேக்க, அவைக்கு ராசமரியாதை குடுத்து, கேக்கிற காசையும் குடுத்து அனுப்பிறதுதான் பனை தென்னைச் சங்கங்களின்ர வாடிக்கையான வேலையாப் போச்சு.

சில இடங்களில காசு மட்டும் கேக்காமல், தங்கட 'டார்கெட்டை' காட்டுறதுக்காக, கேஸ் ஏதும் தரச் சொல்லியும் கேக்கினம். சுகாதாரமில்லாத கள்ளு விற்பனை, பழுதான கள்ளை வித்தது அப்பிடி ஏதும் கேஸ் வாற மாதிரி தங்கட சங்கத்தில வேலை செய்யிற ஆக்களை, அதே சங்கங்கள் செட் பண்ணிக் குடுக்க வேணும். இல்லாட்டி முதல் சொன்ன மாதிரி, வேணுமெண்டு வலிய ஏதும் சாட்டுக் கண்டுபிடிச்சு தவறணையைப் பூட்டிப் போடுவினம்.

இப்ப சில சங்கங்களில புதிசா கள்ளுச் சீவுறவைக்கு லைசென்ஸ் குடுக்கிறதுக்கு, ஒரு பனைக்கு ஆயிரம், ரண்டாயிரம் எண்டு கையை நீட்டுகினமாம் கலால்காரர். பனையால விழுந்தவனை கலால்காரர் ஏறி மிதிக்கிற இப்பிடியான வேலையால கனபேர் இந்தத் தொழிலையே விட்டிட்டினம். இப்பகூட 'பட்சி சொன்னதெல்லாம் பச்சைப் பொய்' எண்டு கொண்டு கலால்காரர், வரிஞ்சு கட்டிக் கொண்டு வருவினம். அப்பிடி வந்தாலும் நல்லதுதான். அப்பதான் பட்சியிட்டை இருக்கிற ஆதாரங்களை ஒவ்வொண்டா வெளியில கொண்டுவரலாம்.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப்பொருள்கள் விற்பனை சுகாதாரத்துறை கண்காணிப்பு!

*மக்களும் முறையிடலாம்*

**சாவகச்சேரி, மார்ச் 28**

**சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தரமற்ற மற்றும் சுகாதாரமற்ற உணவுப்பொருள்களின் விற்பனை தொடர்பில் சுகாதாரப் பிரிவினர் கண்காணிப்பை ஆரம்பித்துள்ளனர்.**

அவ்வாறான பொருள்கள் விற்பனை செய்வது தெரிந்தால் உடனடியாக 021 227 0014 என்னும் தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்புகொண்டு மக்கள் முறையிடலாம் என்று சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

தற்போது ஏற்பட்டுள்ள உணவுப் பொருள்கள் தட்டுப்பாடு மற்றும் உணவுப் பொருள்களின் விலை அதிகரிப்புக் காரணமாக தரமான மற்றும் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக உணவுப் பொருள்களை பொதுமக்களுக்கு விநியோகிக்குமாறு வர்த்தகர்களுக்கு அறிவித்துள்ளோம். பலசரக்கு விற்பனை நிலையங்கள், உணவுக்கையாளும் நிலையங்கள், உணவுப் பொருள்கள் உற்பத்தி நிலையங்கள் மற்றும் சிற்றுண்டி நிலையங்கள் மீது திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பாவனைக்கு உதவாத உணவுப் பொருள்கள், திகதி காலாவதியான பொருள்கள் போன்றவை கைப்பற்றி அழிக்கப்படுவதுடன், வர்த்தகர்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்படுகின்றது. பாவனைக்கு உதவாத பொருள்கள் வர்த்தக நிலையங்களில் காணப்படின், அவற்றை தனியான பகுதியில் களஞ்சியப் படுத்தவேண்டும்.

விற்பனைப் பொருள்களுடன், பாவனைக்குதவாத பொருள்கள் விற்பனைக்கு வைத்திருக்கும் வர்த்தகர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை, வர்த்தக நிலையங்களுக்கு பொருள்களை விநியோகம் செய்வோரும் பொருள்களின் தரம் மற்றும் சுகாதார விதிமுறைகள் தொடர்பில் பரிசீலிக்க வேண்டும். (ம-4,9)

*முல்லைத்தீவில்*

## காணிப் பயன்பாட்டு திட்டமிடல் கூட்டம்!

முல்லைத்தீவு, மார்ச் 28

முல்லைத்தீவு மாவட்டத்தின் நடப்பாண்டுக்கான முதலாவது காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் குழுக் கூட்டம் முல்லைத்தீவு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது பிரதேச மட்டக் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் குழுக் கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டு மாவட்டக் காணிப் பயன்பாட்டு திட்டமிடல் குழுக் கூட்டத்தில் அனுமதிக்காக சமர்ப்பிக்கப் பட்டுள்ள காணி தொடர்பான விவரங்கள் ஆராயப்பட்டன.

மாந்தை கிழக்கு, துணுக்காய், ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச செயலர் பிரிவின் காணிக் கோரிக்கைகள் தொடர்பான விடயங்களும் ஆராயப்பட்டு, தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலும் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள காணி உரித்து நிர்ணயித்தல் செயற்றிட்டம் தொடர்பாக காணிப் பயன்பாட்டு திட்டமிடல் பிரிவின் உதவிப் பணிப்பாளர் கு.முரளீதரனால் விளக்கமளிக்கப் பட்டது.

அத்துடன் இளம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக அரச காணிகளில் முதலீட்டு வாய்ப்புக்களை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் நேர்முகத் தேர்வின் முன்னேற்றம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மாவட்டச் செயலர் க.விமலநாதனின் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் மேலதிக மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன், மாவட்டச் செயலக காணிப் பயன்பாட்டு திட்டமிடல் பிரிவின் உதவிப் பணிப்பாளர் கு.முரளீதரன், பிரதேச செயலர்கள், உட்பட உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டனர். (ம-14)



## பெண்கள் வலுவூட்டல் தொழில்நுட்பப் பயிற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 28

டேவிட் பீரிஸ் நிறுவனத்தால் இலவசமாக நடத்தப்படும் பெண்களை வலுவூட்டல் தொழில்நுட்பப் பயிற்சி அண்மையில் யாழ். கலைக்கோட்டம் மண்டபத்தில் நடைபெற்றது.

டேவிட் பீரிஸ் தொழிற்பயிற்சி நிலையத்தின் ஆசிரியர் ஜெகநேசன் குறித்த பயிற்சியில் வளவாளராகக் கலந்துகொண்டார். அத்துடன் செய்முறை பயிற்சிநெறியில் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி திருத்தும் பயிற்சிநெறிகள் இன்று திங்கட்கிழமையிலிருந்து நடைபெறவுள்ளன. இந்தப் பயிற்சி நெறியில் வயது வேறுபாடின்றி பெண்கள் கலந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-14,159)

## வவுனியாவில் எரிவாயுவுக்கு பொதுமக்கள் நீண்டவரிசை

வவுனியா, மார்ச் 28

வவுனியாவில் சமையல் எரிவாயுவைப் பெற்றுக்கொள்வதற்காக பொதுமக்கள் கடந்த வெள்ளிக்கிழமை நீண்ட வரிசையில் காத்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு எதிரே அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சமையல் எரிவாயு வழங்கப்பட்டது. இதனையடுத்தே மக்கள் எரிவாயுவுக்காக நீண்ட வரிசையில் காத்திருந்து அதனைப் பெற்றுக் கொண்டனர். (ம-14,110)



*மின்வெட்டால்*

## குளிரூட்டியிலுள்ள உணவுகள் காலாவதியாகும் அபாயநிலை

கொழும்பு, மார்ச் 28

விற்பனை நிலையங்களில் குளிர்சாதனப் பெட்டிகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள உணவுப் பொருள்கள், மின்வெட்டு காரணமாக குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் காலாவதியாகும் நிலை ஏற்பட்டுள்ளது என்று பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் முதல் இதுவரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில், 407 விற்பனையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார். எனவே, குளிர்சாதனப் பெட்டிகளில் சேமித்து வைக்கப்படும் உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது பொதுமக்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-4,இ)

## பங்குனித்திங்கள் உற்சவத்தில் சுகாதார விதிமுறை கட்டாயம்

சாவகச்சேரி, மார்ச் 28

தென்மராட்சி பிரதேச கோவில்களில் இன்று இடம்பெறும் பங்குனித் திங்கள் இரண்டாவது உற்சவத்தின்போது சுகாதார விதிமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றும்படி பொதுமக்களுக்கு சுகாதாரத்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இதன்படி முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணல், கொரோனாத் தடுப்பூசி ஏற்றியமைக்கான அட்டை வைத்திருத்தல் போன்றவை கட்டாயமாக்கப்படும் என்று சுகாதாரத்துறையினர் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-14,9)

## எரிவாயு சிலிண்டருக்கான வரிசையில் கைகலப்பு

*பொலிஸார் உள்ளிட்ட பலர் காயம்*

கொழும்பு, மார்ச் 28

எரிவாயு சிலிண்டர்களை கொள்வனவு செய்வதற்காக நின்ற வரிசையில் ஏற்பட்ட மோதலில் பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட பொதுமக்கள் பலர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் கண்டியில் உள்ள லிட்ரோ எரிவாயு விநியோக நிலையத்தில் நடந்துள்ளது.

எரிவாயு சிலிண்டர்களை பெறுவதற்காக கடந்த வெள்ளிக்கிழமை இரவு முதலே ஏராளமானோர் வரிசையில் நின்று கொண்டிருந்த நிலையில், அவர் களுக்கு இடையே ஏற்பட்ட வாக்குவாதம் மோதலாக மாறியுள்ளது. பொலிஸ் அதிகாரியொருவரும் இதன்போது காயமடைந்தார். (ம-4,இ)

## நிதி முகாமைத்துவ பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், மார்ச் 28

உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுக்கான நிதி முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிப்பட்டறை எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம், 5ஆம், 6ஆம் திகதிகளில் யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பணியக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-14,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரமுனவுக்குள் மீண்டும் பிளவா?

## 10 எம்.பிக்கள் சுயாதீனமாகச் செயற்பட முடிவு

**கொழும்பு, மார்ச் 28**

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் கீழ் போட்டியிட்டு தெரிவான 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றில் சுயாதீன அணியாகச் செயற்படவுள்ளனர் என்று அறியமுடிகின்றது.**

சுசில் பிரேமஜயந்த, சந்திம வீரக்கொடி, நிமல் லங்சா, கெவிந்து குமாரதுங்க, அனுர பிரியதர்ஷன யாப்பா, பிரேமனாத் தொலவத்தை மற்றும் சில இராஜாங்க அமைச்சர்கள் இந்த அணியில் இணையவுள்ளனர்.

ஜனாதிபதியின் கொள்கைத் திட்டமான 'சௌபாக்கிய' நோக்குத் திட்டத்தை நடைமுறைப்படுத்தாமை, மக்கள் தாங்க முடியாத அளவில் அதிக விலையில் அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்ய இடமளித்துள்ளமை ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து இவர்கள் சுயாதீனமாக இயங்க முடிவு செய்துள்ளனர்.

அதேவேளை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜீவன் தொண்டமானுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியை வழங்காது, எஸ்.பி.திஸாநாயக்கவுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியை வழங்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அரசில் இருந்து விலக வேண்டும் என்று காங்கிரஸின் அரசியல் சபை தீர்மானம் கொண்டு வந்துள்ளது. இதன் காரணமாகவே சர்வகட்சி மாநாட்டில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி கலந்துகொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-4,இ)

## பின்வரிசை எம்.பிகளிடையே மீண்டும் கருத்து மோதல்கள்

கொழும்பு, மார்ச் 28

அரசாங்கத்தின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் மீண்டும் கருத்து மோதல்கள் ஏற்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் ஏற்கனவே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன. பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் அமைச்சர் பஸில் ராஜபக்ச ஆகியோர் தலையிட்டு அதனைத் தீர்த்து வைத்தனர். இந்த நிலையில் பெரமுனவின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் மீண்டும் கருத்து மோதல்கள் ஏற்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-4,இ)

## அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் ஆசிய நாடொன்றின் தூதரகம்?

கொழும்பு, மார்ச் 28

அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் முயற்சியில் ஆசிய நாடொன்றின் தூதரகம் ஈடுபட்டுள்ளது என அரசாங்கத்தின் உயர்மட்டத்தில் சந்தேகம் நிலவுகின்றது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போதைய நிலைமையைப் பயன்படுத்தி அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் முயற்சியில் ஆசிய நாடொன்றின் தூதரகம் ஈடுபட்டுள்ளது என அரசாங்கத்தின் உயர்மட்டங்களில் சந்தேகம் நிலவுகின்றது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

புலனாய்வு அமைப்புக்கள் இதுகுறித்து உன்னிப்பாக அவதானித்து வருகின்றன. தூதரகம் அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக நிதி வழங்குகின்றது என்ற சந்தேகமும் காணப்படுகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)



## ஐக்கிய தேசியக் கட்சியுடைய போராட்டத்தில் சம்பிக்க அணி

### பெரமுன பொதுஎதிரி என்று அவர்கள் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 28

ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுத்த போராட்டத்தில், ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவின் 43ஆவது படைப்பிரிவைச் சேர்ந்தவர்களும் பங்குபற்றியுள்ளனர். பெரமுன தமது பொது எதிரி என்று அவர்கள் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் 43ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கரு பரணவிதான தெரிவித்ததாவது:-

பொதுஜன பெரமுனவை எதிர்கொள்வதற்கான பெரும் கூட்டணியை உருவாக்கும் நோக்கத்துடனேயே இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டோம். பொதுவான எதிரணியொன்றை உருவாக்குவதே சம்பிக்க ரணவக்கவின் கொள்கை. ஒரு பலம்பொருந்திய எதிர்க்கட்சி தலைவரின் முக்கியத்துவம் குறித்து ரணில் விக்கிரமசிங்கவிடமும், சஜித் பிரேமதாஸவிடமும் தெரிவித்துள்ளோம்.

நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சியிடம் ஒரு கால். ஐக்கிய மக்கள் சக்தியில் ஒரு கால் என்ற அடிப்படையில் செயற்படவில்லை. நாங்கள் பொதுவான எதிரணியொன்றை உருவாக்கும் முயற்சிகள் வெற்றி பெறுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம் - என்றார். (ம-4,இ)

## ஜே.வி.பியின் ஆட்சிதான் மக்களுடைய விருப்பம்!

### அநுர தெரிவிப்பு

கொழும்பு, மார்ச்.28

அரசாங்கத்தை ஜனநாயக முறையில் பதவியிலிருந்து நீக்கி, தலைமைத்துவத்தை ஜே.வி.பி. ஏற்கவேண்டும் என்பதையே மக்கள் விரும்புகின்றனர் என்று அதன் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டைக் காப்பாற்றுமாறு மக்கள் எங்கள் கட்சியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நுகேகொட பேரணியில் மிகப் பெருமளவானவர்கள் கலந்துகொண்டமையே இதற்கான சான்று. அடுத்த பேரணி பொலநறுவையில் இடம்பெறும்.

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய, அவர்கள் குறித்து கவனம் செலுத்தக்கூடிய அரசாங்கத்தை உருவாக்குவதே எங்கள் நோக்கம். நாங்கள் எங்கள் திட்டங்களில் மும்முரமாக உள்ளோம். மக்களின் ஆதரவு அதிகரிக்கின்றது. அரசாங்கத்துக்கு ஆதரவான குழுவினர் எங்கள் பேரணியைக் குழப்ப முயன்றனர். நாங்கள் அவர்களை எதிர்கொள்ளத் தயாராகியிருந்தோம். மக்கள் வெள்ளத்தை பார்த்ததும் அவர்கள் பின்வாங்கி விட்டனர். எங்களால் புதிய மாற்றத்தை மதிப்பிட முடிகின்றது. நாங்கள் தலைமைத்துவம் வழங்க வேண்டும் என மக்கள் நேர்மையான வேண்டுகோள்களை விடுக்கின்றனர். நாங்கள் அதற்குத் தயாராகி வருகின்றோம் - என்றார். (ம-4,இ)

## தனியார் பேருந்துகளின் சாரதிகள், நடத்துநர்களுக்கும் அடையாள அட்டை வழங்குக!

### பொது ஊழியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 28

தனியார் பேருந்துகளின் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கும் அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும் என்று இலங்கை தனியார் பேருந்து பொது ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் தமது தொழில்சார் அடையாளங்களை வெளிப்படுத்த முடியாமல் தனியார் பேருந்துகளின் நடத்துநர்கள், சாரதிகள் கடும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். எனவே அரசாங்கம் அவர்களது அடையாளத்தை உறுதிப்படுத்தி அடையாள அட்டையை வழங்கவேண்டும் என்று சங்கத்தின் செயலாளர் குமார ரத்ன ரேணுக கோரிக்கை விடுத்துள்ளார். (ம-4,இ)

## டீசலின் விலையை அதிகரிப்பதற்குச் சதி

### தொழிற்சங்க தலைவர் ஆனந்த பாலித தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 28

டீசல் விலையை மீண்டும் அதிகரிப்பதற்கான சதி நடவடிக்கைகளில் சில தரப்பினர் மீண்டும் ஈடுபட்டுள்ளனர் என தொழிற்சங்க தலைவர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார். லங்கா ஐ.ஓ.சி.நிறுவனம் தனது அனுமதிப்பத்திரம் தொடர்பான முக்கிய நிபந்தனையை மீறியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொழிற்சங்க தலைவர் ஆனந்த பாலித மேலும் தெரிவித்ததாவது:-


லங்கா ஐ.ஓ.சிக்கு இலங்கையில் செயற்படுவதற்கான அனுமதி மாத்திரம் உள்ளது. விலைகளை அதிகரிப்பது குறித்த முடிவை பொறுப்பான அமைச்சரே எடுக்கவேண்டும். லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் தனது அனுமதிப்பத்திரம் தொடர்பான முக்கிய நிபந்தனையை மீறியுள்ளது. ஆனால், அந்த நிறுவனத்துக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

லங்கா ஐ.ஓ.சிக்கு வழங்கப்பட்ட உரிமப்பத்திரத்தின் முக்கிய நிபந்தனை அது தரமான எரிபொருளை தடையின்றி நியாயமான விலைக்கு வழங்கப்படவேண்டும் என்பதே. இந்த நிபந்தனைகளை அந்த நிறுவனம் மீறியுள்ளது. ஆனால், நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ள அதிகாரிகள் அமைதியாக வேடிக்கை பார்க்கின்றனர். அமைச்சரும்அதிகாரிகளும்எந்த நடவடிக்கையும் எடுக்காததை பார்க்கும்போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் விலைகளை அதிகரிப்பதற்கான சதி இடம்பெறுகின்றது என நாங்கள் கருதுகின்றோம் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு-கேது பெயர்ச்சி

## 21.3.2022 முதல் 8.10.2023 வரை



**ராகு-கேது பெயர்ச்சி, வாக்கிய பஞ்சாங்கத்தின்படி எதிர்வரும் 21ஆம் திகதி பிற்பகல் 3.02 மணிக்கு பெயர்ச்சி ஆகிறார். இதில் ராகு ரிஷபத்தில் இருக்கும் கார்த்திகை 2ஆம் பாதத்திலிருந்து மேடராசியில் இருக்கும் கார்த்திகை 1ஆம் பாதத்துக்கும், கேது விருச்சிகத்தில் இருக்கும் விசாகம் 4ஆம் பாதத்திலிருந்து, ஜென்ம ராசியான துலாம்ராசி விசாக நட்சத்திரம் 3ஆம் பாதத்துக்கும் பெயர்ச்சியாக உள்ளார். திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி பிற்பகல் 1.38 மணியளவில் ராகு - கேது பெயர்ச்சி நிகழ்கிறது.**

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் சமமான மரியாதையைத் தரக்கூடிய விருச்சிக ராசியினரே! ஆழமாக யோசித்து அதிரடியாகச் செயற்படுபவர். உங்களுக்கு 21.03.2022 முதல் 08.10.2023 வரையிலும் ராகுவும் கேதுவும் என்ன பலன்களைத் தரப் போகிறார்கள் எனப் பார்ப்போம்.

**ராகுவின் பலன்கள்!**

இதுவரையிலும் உங்கள் ராசிக்கு ஏழாவது வீட்டில் நின்று கொண்டு எதிலும் உங்களுக்கு ஈடுபாடு ஏற்படாதவாறு முடக்கிவைத்திருந்தார் ராகு. தாழ்வு மனப்பான்மையையும், மன உளைச்சலையும், வீண் கவலைகளையும் தந்துகொண்டிருந்தார். இப்போது அவர் ராசிக்கு ஆறாமிடத்தில் வந்து அமர்கிறார். ஆகவே, எதிலும் முன்னேற வைப்பார். சந்தேகத்தால் பிரிந்திருந்த கணவன்-மனைவி ஒன்றுசேர்வார்கள். குடும்பத்தில் எப்போது பார்த்தாலும் சண்டை சச்சரவுகள்தானே மிஞ்சியது? கவலைவேண்டாம். இனி குடும்பத்தில் சந்தோஷம் பிறக்கும். மனைவி பிள்ளைகளுடன் மனம் விட்டுப்பேசுவீர்கள்.

வாழ்க்கைத் துணைவர் அடிக்கடி உடல்நலக்குறைவால் அவதிப்பட்டாரே, இனி அவரின் ஆரோக்கியம் கூடும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி கிடைக்கும். வரவேண்டிய பணம் எல்லாம் வந்து சேரும். கடன் பிரச்சினைகளில் ஒரு பகுதியைத் தீர்ப்பீர்கள்.

பழைய நகைகளை மாற்றிவிட்டு புதிய டிசைனில் ஆபரணங்களை வாங்குவீர்கள். தந்தைவழிச் சொந்தங்களிடேயே மனஸ்தாபங்கள் வெடித்ததே! அந்த நிலை இனி மாறும். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். உறவினர்களுடனான மனவருத்தங்கள் நீங்கும். உங்களைப் பற்றித் தவறாக நினைத்தவர்களின் மனசு மாறும். வழக்கில் வெற்றி பெறுவீர்கள்.

**ராகுபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**

**21.03.2022 முதல் 22.05.2022 வரை:** சூரியனின் கார்த்திகை நட்சத்திரம் 1ஆம் பாதத்தில் ராகு செல்வதால், பிரபலங்களின் ஆதரவு கிடைக்கும். அவர்களின் துணையைப் பயன்படுத்திக்கொள்வீர்கள்.

**23.05.2022 முதல் 29.01.2023 வரை:** சுக்ரனின் பரணி நட்சத்திரத்தில் ராகு செல்வதால் பணப் பற்றாக்குறை நீங்கும். வீடு, வாகனம் வாங்குவீர்கள். வாழ்க்கைத் துணைவரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**30.01.2023 முதல் 08.10.2023 வரை:** கேதுவின் அச்சுவினி நட்சத்திரத்தில் ராகு செல்வதால் வீண் பதற்றம், ஏமாற்றம், சிறுசிறு அவமானங்கள், வாகன விபத்துகள் வந்துபோகும். யாரையும் விமர்சித்துப் பேசாதீர்கள்.




**வியாபாரத்தில்:** மற்றவர்களின் ஆலோசனையால் இழந்தது கொஞ்சம் நஞ்சமில்லை. இனி பழைய தவறுகள் நிகழாத வண்ணம் பார்த்துக்கொள்வீர்கள்.

**உத்தியோகத்தில்:** தொந்தரவு கொடுத்து வந்த மேலதிகாரி இனி கனிவாகப் பேசுவார். சக ஊழியர்களும் உங்களிடம் நட்புறவாடுவார்கள். இழந்த சலுகையை மீண்டும் பெறுவீர்கள். கணினித் துறையினருக்குப் புதிய வாய்ப்புக்கள் தேடி வரும்.

இதுவரை உங்களின் ராசியிலேயே அமர்ந்து உடல் சோர்வு, காரியத்தடைகள், மனஉளைச்சல், விரக்தி மற்றும் சோம்பலைக் கொடுத்து வந்தார் கேது. இப்போது 12இல் சென்று அமர்கிறார். உங்கள் பேச்சில் இனி தெளிவு பிறக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். அடிக்கடி கோபப்பட்டு வீண்வம்பில் சிக்கிக்கொண்டீர்களே... இனி சாந்தமாகப் பேசும் அளவுக்குப் பக்குவப்படுவீர்கள். சகல காரியங்களிலும் ஆர்வம் பிறக்கும். குடும்பத்தில் நல்லது நடக்கும்.

பிள்ளைகளின் கூடாத பழக்கவழக்கங்கள் விலகும். மகனுக்குத் தடைப்பட்டிருந்த திருமணம் நல்லபடியே கூடிவரும். சகோதர, சகோதரி வகையில் அலைச்சல் இருந்தாலும் மகிழ்ச்சிக்குக் குறை இருக்காது. சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தீரும். கோழித் தூக்கம் போட்ட நிலை மாறும்; நிம்மதியான தூக்கம் வாய்க்கும். உடலில் நீர் சேர்ந்து அவதிப்பட்ட நிலை மாறும்; எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும்.

**கேதுபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**

**21.03.2022 முதல் 24.09.2022 வரை:** குருவின் விசாகம் நட்சத்திரத்தில் கேது செல்வதால் குழந்தையில்லாதவர்களுக்குப் பிள்ளை பாக்கியம் உண்டாகும். வீண் செலவுகள் அதிகரிக்கும். கண், காது வலிக்கும்.

**25.09.2022 முதல் 04.06.2023 வரை:** ராகுவின் சுவாதி நட்சத்திரத்தில் கேது செல்வதால் உங்களின் புகழ், செல்வாக்கு கூடும். எடுத்த வேலைகளை கொஞ்சம் போராடித்தான் முடிக்கவேண்டி வரும். மறைமுக எதிரிகளிடம் கொஞ்சம் கவனமாக இருங்கள்.

**04.06.2023 முதல் 08.10.2023 வரை:** செவ்வாயின் சித்திரை நட்சத்திரத்தில் கேது செல்வதால் சகோதர வகையில் மனஸ்தாபங்கள், அலைச்சல் வரக்கூடும். அவருடன் வீண்விவாதம் வேண்டாமே.

# விசுவாசம் எம் சுவாசமாகட்டும்

தவக்காலச் சிந்தனை

கலிலேயாவுக்கு வந்திருந்த இயேசுவிடம் அரச அலுவலர் ஒருவர் "ஐயா என் மகன் இறப்பதற்கு முன்வாரும்" - என்றார். இயேசு அவரிடம் "நீ புறப்பட்டுப்போம். உம் மகன் பிழைத்துக் கொள்வான்" - என்றார்.

எங்கே புதுமைகள் நடக்கின்றன. எங்கே அருஞ்செயல்கள் நிகழ்கின்றன என்று தேடி ஓடும் மக்களின் எண்ணிக்கை பெருகிவரும் காலமிது. குணமடைவான் என்ற எந்த ஆதாரமுமின்றி அந்த அரச அலுவலர் நம்பிக்கையோடு புறப்பட்டுச் சென்றமை ஆச்சரியமாக உள்ளது. உன் மகன் பிழைத்துக் கொள்வான் என்ற இறை வார்த்தையை நம்பிச் சென்றது அவரது ஆழமான விசுவாசத்தை வெளிப்படுத்துகிறது. அரச அலுவலர் அதிகாரியாக அல்ல அன்புள்ள தந்தையாக இயேசுவைக் காண வந்து வேண்டுதல் புரிந்தார். எமது அதிகாரங்கள், ஆயுதபலங்கள், செல்வாக்கு எல்லாம் இறைவன் முன் ஒன்றுமில்லை.

அன்புத் தந்தையாக, தாயாக, பிள்ளைகளாக இறைவனின் திருப்பிரசன்னத்தின் முன் மண்டியிடுவோம். மலருக்கு அதன் வாசம் சிறப்பைத் தருகின்றது. கிறிஸ்தவருக்கு விசுவாசம் பெருமையும் நலமும் சேர்க்கிறது. புரியாத புதிராக உள்ள சிலுவையை விசுவாசக் கண்ணோடு நோக்கினால் புதுமைகளின் நாயகன் கிறிஸ்து எமது கண்களுக்குப் புலப்படுவார். விசுவாசம் எமது சுவாசமாக அமையட்டும்.

**யே.சுபீட்சன்**, கொழும்புத்துறை

# ஈஸ்டர் தாக்குதல் 16 பேருக்குப் பிணை

**கொழும்பு, மார்ச் 28**

**ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில், சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 16 பேருக்கு இரண்டரை வருடங்களின் பின்னர் பிணை வழங்கப்பட்டுள்ளது.**

கொழும்பு மேலதிக நீதிவான் சந்திம லியனகே முன்னிலையில், கடந்த வெள்ளிக்கிழமை முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவர்களுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் சந்தேகநபர்களின் வெளிநாட்டுப் பயணங்களுக்குத் தடை விதித்துள்ள நீதிமன்றம், பிணையாளர்கள் நெருங்கிய உறவினர்களாக இருக்கவேண்டும் என்றும் பிணை நிபந்தனை விதித்துள்ளது. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் காலை 9 மணி முதல் மதியம் 12 மணிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில், பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரி வில் முன்னிலையாகுமாறும், நீதிமன்றம் சந்தேகநபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. (ம-4-இ)

# மழைநீர் சேகரிப்பு வளநிலையம் புதுக்குடியிருப்பில் திறந்து வைப்பு

முல்லைத்தீவு, மார்ச் 28

லுங்கா மழைநீர் சேகரிப்பு மன்றத்தின் பிராந்திய வளநிலையம் புதுக்குடியி ருப்பில் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

லுங்கா மழைநீர் சேகரிப்பு மன்றத்தின் பணிப்பாளர் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் அந்தப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றனர்.

ஆண்டு தோறும் அதிகளவில் மழைநீர் கிடைக்கப் பெறும் நிலையில் இனிவரும் காலங்களில் மக்களுக்கு மழைநீரை சேகரிப்பது தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த நிலையம் செயற்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நாளொரு நல்வார்த்தை

"நெருப்பு தங்கத்தைப் புடமிடுகிறது; துன்பம் மனிதனைப் புடமிடுகிறது" - செனேகா

## தயக்கத்தை தகர்த்தெறியுங்கள்

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகின்றபோது ஓர் விடயத்தை திரும்பத் திரும்பக் கூறி வருகின்றார். புலம்பெயர் தமிழர்களை இலங்கையில் முதலிட வருமாறு அவர் கோரிக்கையை முன்வைக்கின்றார். அதுவும் நாட்டின் தற்போதைய வங்குரோத்து நிலையில், அதிலிருந்து மீள்வதற்கு புலம்பெயர் தமிழர்களின் முதலீடு அவசியமானதே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பின்போதும் இந்த விடயம் முக்கியம் பெற்றிருக்கின்றது. புலம்பெயர் தமிழர்கள் இலங்கைக்கு முதலிட வருகின்றபோது அவர்களை வடக்கு – கிழக்கு மாகாணங்களில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தவேண்டும் என்று கூட்டமைப்பு கோரியுள்ளது. அதற்கு அரசும் இணங்கியுள்ளது.

தற்போதைய சூழலில் புலம்பெயர் தமிழர்களின் முதலீட்டை எதிர்பார்க்கின்ற அரசு, அவர்கள் முதலிடுவதற்குரிய உவப்பான சூழலை அவர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கின்றதா? இந்தக் கேள்விக்கு 'இல்லை' என்பதே பதில்.

நல்லாட்சி அரசு 2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததும் புலம்பெயர் அமைப்புக்கள், புலம்பெயர் தமிழர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடைகளை நீக்கியது. அவர்களை நாட்டுக்குள் வருவதற்கு தங்குதடையின்றி அனுமதி வழங்கியது. அத்துடன் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுடனும் பேச்சு நடத்தியது.

ஆனால், சிங்கள – பௌத்த வெறியுடன் ஆட்சியைக் கைப்பற்றிய ராஜபக்சக்கள் முதலாவது வேலையாக புலம்பெயர் அமைப்புக்களையும், புலம்பெயர் தமிழர்களையும் தடைப்பட்டியலில் சேர்த்தனர். அந்தத் தடைப்பட்டியல் இன்னமும் தொடர்கின்றது.


அத்துடன் புலம்பெயர் தமிழர்கள், இன்னமும் தனிநாட்டுச் சிந்தனையில் செயற்படுகின்றனர், அவர்கள் விடுதலைப் புலிகளை மீளுருவாக்க முயல்கின்றனர், தீர்வுக்கான முயற்சிகளை குழப்பியடிகின்றனர் என்று ஓயாது புராணம் பாடுபவர்களும் ராஜபக்ச அணியில்தான் இப்போதும் இருக்கின்றார்கள்.

இப்படியெல்லாம் தடை கற்களையும் வைத்துக் கொண்டு, அதனை அகற்றாது புலம்பெயர் தமிழர்களை முதலிட அழைப்பது என்பது, வீட்டுக்கதவை இறுகமூடிவிட்டு, விருந்துக்கு அழைப்பது போன்றதே. புலம்பெயர் தமிழர்கள் தாயகத்தில் முதலீடு செய்வதற்கு ஆர்வமாக இருந்தாலும், அவர்களது முதலீட்டுக்கான பாதுகாப்பான சூழல் உருவாக்கப்படவில்லை.

கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் அல்லது அவர்களுக்கு உதவியோர் என்போரின் சொத்துக்கள், தடைசெய்யப்பட்ட அமைப்புக்களின் பட்டியலில் உள்ள நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்கள், தடைப்பட்டியலில் உள்ள தனிநபர்களின் சொத்துக்கள் என்பன பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அரசுடமையாக்கப்பட்டன. புலம்பெயரிகள் மீதான தடைப்பட்டியல் என்பது அரசுகள் மாறும்போது அவை தமக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கின்றமையே இலங்கையில் இதுவரை காலமும் தொடர்கின்றது.

இவ்வாறான சூழலில் புலம்பெயர் தமிழர்களை இப்போது முதலிட அழைக்கும் கோத்தா அரசு, இங்கு முதலீடு செய்த பின்னர் அவர்களை தடைப்பட்டியலில் உள்ளடக்கி அவர்களின் முதலீடுகளை அரசுடமையாக்காது என்பதற்கு எந்த உறுதிப்பாடும் இல்லை.

எனவே, இவ்வாறான – மோசமான சம்பவங்கள் இடம்பெறவே மாட்டாது என்ற நம்பிக்கையை புலம்பெயரிகள் மத்தியில் உருவாக்கவேண்டும். அதற்கு தமிழர் தேசத்துக்கு சுயாட்சி வழங்குவதுதான் ஒரே வழி. ஆனால், அதை ஒருபோதும் சிங்களப் பேரினவாத அரசு செய்யப்போவதில்லை என்பதே தத்...



# அரசுக்கு எதிராக தேரர்கள் ஓரணி!

### அபயராம விகாரையில் முகாமிட்டு ஆலோசனை

**கொழும்பு, மார்ச் 28**



**மார்ச் 31 ஆம் திகதி மகாநாயக்க தேரர்கள் அபயராம விகாரையில் ஒன்று கூடவுள்ளனர். இதன்போது அரசு தொடர்பில் தீர்மானமொன்று எடுக்கப்படும் - இவ்வாறு அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"நாட்டு மக்கள்மீது தொடர்ந்தும் சுமைகள் திணிக்கப்படுமானால் இந்த அரசாங்கத்துக்கு எதிராக நாமும் வீதியில் இறங்குவோம், யாத்திரை செல்வோம். இந்த அரசு வீடு செல்ல வேண்டும் என வலியுறுத்துவோம். எனவே, நாட்டில் ஆட்சி முகாமைத்துவத்தையும், கண்காணிப்பையும் மீண்டும் பொறுப்பேற்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் கோரிக்கை விடுக்கின்றோம். ஜனாதிபதி பதவியில் கோத்தாபய இருக்கட்டும். பஸில் ராஜபக்சவுக்கு நிதி அமைச்சு அல்லாமல், பிரிதொரு அபிவிருத்தி அமைச்சுப் பதவியை வழங்கலாம். இம்மாதம் 31 ஆம் திகதி மகாநாயக்க தேரர்கள் ஒன்று கூடவுள்ளோம். இதன்போது அரசு தொடர்பில் தீர்மானம் ஒன்று எடுக்கப்படும்" - என்றார்.

(ம-44)

# சு.கவினர் விலகினால் நானும் விலகத்தயார்!

கொழும்பு, மார்ச் 28

சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளை துறந்தால், நானும் அமைச்சுப் பதவியைத் துறப்பதற்குத் தயார் - இவ்வாறு அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் நிதி அமைச்சருக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர். இதன்படி தேவையான நடவடிக்கையை நிதி அமைச்சர் மேற்கொள்வார்.

அமைச்சரவை எண்ணிக்கையை மேலும் குறைக்குமாறு சர்வகட்சி மாநாட்டில் மைத்திரிபால சிறிசேன பரிந்துரையை முன்வைத்துள்ளார். முதலில் சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளைத் துறந்து, முன்னுதாரணமாகச் செயற்படவேண்டும். அப்போது என்னாலும் அமைச்சுப் பதவியை துறக்கக்கூடியதாக இருக்கும். அதில் எனக்கு எந்தவிதப் பிரச்சினையும் இல்லை" - என்றார். (ம-44)

சுபநேரம் : 10.43 - 12.13
ராகுகாலம்: 03.13 - 04.43

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** சூழ்நிலை அறிந்து பிறருக்கு விட்டு கொடுப்பீர்கள். பிரச்சினை தீரும். வீட்டில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். தொழில் திறன் கூடும். தொழிலில் முன்னேற்றம் உண்டு. பணியாளர்களுக்கு அனுகூலமான நாள்.

**இடபம்:** பணியிடத்தில் மகிழ்ச்சிகரமான புதிய திருப்பம் ஏற்படும். அதிகாரிகளின் ஆதரவு கிடைக்க முயற்சி எடுப்பீர்கள். நண்பர்களால் சில வருத்தங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**மிதுனம்:** ஆன்மிக சிந்தனைகளால் மனதில் அமைதி நிலவும். எதிர்பார்த்த தொகை கைக்கு வரும். உங்களின் புகழ் கூடும். வேலை சம்பந்தமாக இருந்த மனஉளைச்சல் தீரும்.

**கடகம்:** குடும்பத்தினரால் செலவு ஏற்படும். படபடப்பு குறையும். எதிர்பார்த்த நற்செய்தி வீடு தேடி வரும். சமூகத்தில் நன்மதிப்பு உண்டாகும். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவதால் மகிழ்ச்சி நிலவும்.

**சிம்மம்:** பாராட்டு, பதவிகள் உங்களைத் தேடிவரும். கருணை எண்ணம் மேலோங்கும். அதிகாரியின் ஆதரவால் சில நன்மைகளை எதிர்பார்க்கலாம். பணியிடத்தில் சிறப்பாகச் செயற்பட்டு பாராட்டு பெறுவீர்.

**கன்னி:** பணவரவு சுமாராகவே இருக்கும். பெண்களுக்கு நிம்மதி கூடும். அரசாங்க வகையில் உதவி கிடைக்கும். நேர்மையாக உழைத்து வாழ்வில் உயர்வு காண்பீர்கள்.

**துலாம்:** சந்தோஷம் நிறைந்த நாள். அலைச்சல் கூடும். இன்று நீண்ட நேரம் பணிபுரிய வேண்டிய நாள். உழைப்பின் பலனை இன்று எதிர்பார்க்கலாம். செலவு கூடும். நண்பர்களிடம் கவனமாக இருக்கவும்.

**விருச்சிகம்:** உடல்நலம் மேம்படும். பிள்ளைகளுக்கு திருமணத்தடை நீங்கும். குடும்பத்தில் ஏற்படும் திடீர் சுபச்செலவுகளால் சந்தோஷம் கிடைக்கும். எதிர்பாராத நிகழ்வுகளால் நன்மை உண்டு. பேச்சால் பிறரை கவர்வீர்கள்.

**தனுசு:** குடும்பத்தினரின் செயற்பாடுகளால் மகிழ்ச்சி அடைவீர்கள். தாழ்வு மனப்பான்மையை அகற்றிக் கொள்வது நல்லது. தேவையான உதவிகள் கிடைக்க பாடுபடுவீர்கள்.

**மகரம்:** நீண்ட நாள்களாக இருந்து வந்த இழுபறியான சூழல் மாறும். தனிப்பட்ட விஷயங்கள் உங்களுக்குச் சாதகமாக முடியும். உங்களுக்கு பாராட்டு கிடைக்கும்.

**கும்பம்:** குழந்தைகள் மூலம் சிறு சிறு நன்மைகள் ஏற்படும். தந்தையின் மூலம் நன்மை ஏற்படலாம். நிதி நிலை சீராகும். புதிய நபர் ஒருவரது நட்பினால் லாபம் காண்பீர்கள்.

**மீனம்:** உடன்பிறந்தோருடன் சுமுகமாகச் செல்வது நல்லது. நீங்கள் எதிர்பார்த்த சுபச்செய்தி தாமதமாகவே வரும். ஆன்மிக சிந்தனை அதிகரிக்கும். மன அமைதி ஏற்படும். ஆரோக்கியம் மேம்படும்.

## சவுதி அரேபியாவின்
# எண்ணெய் சேமிப்பு கிடங்குமீது ஹவுத்தி தாக்குதல்!



சவுதி, மார்ச் 28
சவுதி அரேபியாவின் ஜெட்டா நகரில் உள்ள எண்ணெய் சேமிப்புக் கிடங்கு மீது யேமனின் ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் கடந்த வெள்ளிக்கிழமை தாக்குதல் நடத்தியுள்ளனர்.
ஆளில்லா விமானத்தின் மூலம் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனவும் தாக்குதலில் எவ்வித உயிரிழப்பும் நேரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.
இந்த எண்ணெய் சேமிப்புக் கிடங்கு மீது ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் சில தினங்களுக்கு முன்பு தாக்குதல்களை நடத்திய நிலையில் இன்று நடைபெற இருக்கும் 'கிராண்ட் பிரிக்ஸ்' கார் பந்தயத்தை தடுக்கும் விதமாக மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்த எண்ணெய் சேமிப்பு நிலையத்தில் டீசல், கேசோலின், ஜெட் விமான எரிபொருள் ஆகியவை சேமித்து வைக்கப்பட்டுள்ளன. தீயை அணைக்கும் பணியில் தீயணைப்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



## கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனை

சியோல், மார்ச் 27
கண்டம் விட்டு கண்டம் பாயும் அணு ஏவுகணையை வட கொரியா சோதித்துள்ளது.
ஹுவாங்சோங் - 17 எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த ஏவுகணை இதுவரை வடகொரியா சோதித்து இருக்கும் ஏவுகணைகள் அனைத்தையும் விட இந்த ஏவுகணை அதிக தூரம், அதிக உயரம் பாய்ந்து ஜப்பானுக்கு மேற்கே கடலில் வீழ்ந்துள்ளது என வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் தெரிவித்துள்ளார். (ச-இ)

## உணவுப் பிரியை கின்னஸ் சாதனை

இங்கிலாந்தைச் சேர்ந்த உணவு பிரியை ஒருவர் ஒரு நிமிடத்தில் 352 கிராம் நிறையுள்ள 19 சிக்கன் நக்கட்ஸ் எனப்படும் உணவை சாப்பிட்டு கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.
இதற்கு முன் நியூஸிலாந்தைச் சேர்ந்த உணவு பிரியை நெலா சிஸ்ஸெர் ஒரு நிமிடத்தில் 298 கிராம் உண்டமையே சாதனையாக கருதப்பட்டது. (ச-இ)

# ஜோ பைடனை குறிவைத்து ரஷ்யப்படைகள் தாக்குதல்

கீவ், மார்ச் 28
உக்ரேன் மீது ஒரு மாதத்துக்கும் மேலாகத் தாக்குதல் நடத்தி வரும் ரஷ்யா, உக்ரைனின் மேற்கு பகுதியில் உள்ள லீவ் நகரை குறிவைத்து தாக்குதல் நடத்தியுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உக்ரைனின் அண்டை நாடான போலந்து சென்றுள்ள நிலையில் அதன் அருகேயுள்ள பகுதியில் ஏவுகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## மனிதக் குருதி மாதிரிகளில் பிளாஸ்ரிக் துகள்கள்

மனிதக் குருதி மாதிரிகளில் முதல்முறையாக நுண்ணிய பிளாஸ்ரிக் துகள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என நெதர்லாந்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஆய்வில் தெரிவித்துள்ளனர். காற்று, தண்ணீர், உணவு ஆகியவற்றின்வழி நுண்ணிய பிளாஸ்ரிக் துகள்கள் உடலுக்குள் நுழைந்திருக்கலாம் என்று ஆய்வில் கூறப்படுகிறது. (ச-இ)



ஆப்கானிஸ்தானில் மேல்நிலை கல்வி கற்பதற்கு மாணவிகளுக்குத் தடைவிதிக்கப்பட்டு, பெண்கள் உயர்நிலைப் பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் மீண்டும் பாடசாலைகளைத் திறக்குமாறு கோரி காபூல் நகர வீதியில் மாணவிகளும் பெண்களும் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ச-இ)

# மருத்துவமனைகள் மீது தாக்குதல்கள் அதிகரிப்பு

## உலக சுகாதார ஸ்தாபனம் கவலை

கீவ், மார்ச் 28
உக்ரைனில் மருத்துவமனைகள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன என உலக சுகாதார ஸ்தாபனம் கவலை தெரிவித்துள்ளது.
உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ள நிலையில் உக்ரைனின் மருத்துவமனைகள், நோயாளர் காவு வண்டி மற்றும் மருத்துவர்கள் மீது தாக்குதல் சம்பவங்கள் பதிவாகியுள்ளதோடு தாக்குதல் எண்ணிக்கையும் நாளாந்தம் அதிகரித்து வருகிறது.
இந்தத் தாக்குதல்களில் இதுவரை யாலி சுகாதார சேவைகள் மீதான 72 தாக்குதல்களில் 71 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் எனவும் 37 பேர் காயமடைந்துள்ளனர்.
எனினும் ரஷ்யா பொதுமக்களை குறிவைத்து தாக்குதல் நடத்துவதை மறுத்துள்ளது என உலக சுகாதார ஸ்தாபனத்தின் உக்ரேன் நாட்டின் பிரதிநிதி ஜார்னோ ஹபிச் தெரிவித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதார கொள்கைகள் படுதோல்வி!

## ஹர்ஷா டி சில்வா தெரிவிப்பு



**கொழும்பு,மார்ச் 28**

**இலங்கை அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள் படுதோல்வியடைந்துள்ளன என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதனை சர்வதேச நாணயநிதியத்தின் அறிக்கைகளும் சுட்டிக் காட்டியுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷா டி சில்வா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கை அரசாங்கம் முன்னெடுத்த பொருளாதாரக் கொள்கை காரணமாக நாட்டின் 22 மில்லியன் மக்கள் தற்போது முன்னெப்போதும் இல்லாத வகையில் மிகவும் துயரமான, மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டுள்ளனர்.

நாடாளுமன்ற பொறிமுறை ஊடாக, நாங்கள் சீர்திருத்தங்களை அரசாங்கத்துடன் இணைந்து முன்னெடுக்கத் தயாராகவுள்ளோம். நிதிக்குழு அல்லது விசேட குழு மூலம் இதனை முன்னெடுக்கலாம். மத்திய வங்கி ஆளுநர் ஒரு போதும் சர்வதேச நாணயநிதியத்தின் உதவியை நாடப்போவதில்லை, அதன் ஆலோசனையும் தேவையில்லை என்று தொடர்ச்சியாகத் தெரிவித்து வந்தார்.

அரசாங்கம் பின்பற்றிய பொருளாதாரக் கொள்கைகள் முற்றாக தோல்வியடைந்து விட்டன என சர்வதேச நாணய நிதியம் தற்போது தெரிவித்துள்ளது. மத்திய வங்கியின் திட்டமும் தோல்வி என்பதை நிரூபித்துள்ளது. சர்வதேச நாணயநிதியத்தின் பரிந்துரைகளை ஏற்கவேண்டுமா? இல்லையா? என்பது அரசியல் தீர்மானம் இல்லை-என்றார். (ம-4,இ)


முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணுலகில் 08.02.1953

விண்ணுலகில் 08.04.2021



அமரர்

திரு.சபாரட்ணம் ரவிந்திரலால்

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்) [illegible]

திதி: ஏகாதசி (28.03.2022)

ஓராண்டு சென்றிடினும்
உங்கள் உருவம் கண்முன்னே !
ஆண்டுகள் எத்தனை கழிந்திடினும்
அழியாது உங்கள் நினைவுகள்

உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!

கேணியடி ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

[illegible] நிறைவுடன்
ர.மகேஸ்வரி ( மனைவி)
074 146 9522

(ஐ.43799) (2.6)


## எரிபொருளுக்கு இன்னும் வரிசை

கொழும்பு, மார்ச் 28

எரிபொருள் விநியோகம் சீராக நடைபெறுகின்றது என்று அரசாங்கம் கூறுகின்றபோதும், நேற்றும் நாட்டின் பல இடங்களில் எரிபொருளுக்காக மக்கள் வரிசையில் காத்திருந்ததைக் காண முடிந்தது.

அதேவேளை, 37 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எரிபொருள் அடங்கிய கப்பல் ஒன்று இன்று நாட்டை வந்தடையவுள்ளது. மேலும் ஒரு தொகை எரிபொருள் அடங்கிய கப்பல் ஒன்று எதிர்வரும் ஏப்ரல் மாத முதல் வாரத்தில் நாட்டை வந்தடையவுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை 40 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருளுடன் நாட்டை வந்தடைந்த கப்பலுக்கு கட்டணம் செலுத்தப்பட்டமையை அடுத்து அந்த எரிபொருளை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. ஆயினும் நாட்டின் பல பகுதிகளில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்களின் வரிசையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அதேநேரம், எரிவாயுவை பெற்றுக்கொள்வதற்குச் சென்ற மக்களுக்கு போதுமான எரிவாயு கிடைக்காமையின் காரணமாக எரிவாயுவுக்கான வரிசை தொடர்கின்றது.

லிட்ரோ நிறுவனத்தால் நாளாந்தம் சுமார் ஒரு லட்சத்து 20 ஆயிரம் எரிவாயு கொள்கலன்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படுகின்றன என்று கூறப்படுகின்றது. (ம)

## இசை நிகழ்ச்சியில் 'கோ கோத்தா கோ'

கொழும்பில் பிரமாண்டமாக நடத்தப்பட்ட இசை நிகழ்ச்சி ஒன்றில் இளைஞர்கள் 'கோ கோத்தா கோ' என்று கோஷமிட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பெரும் எண்ணிக்கையான பார்வையாளர்கள் மத்தியில் இந்த இசை நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது. நிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது மின்துண்டிப்பு ஏற்பட்டதை அடுத்து நிகழ்ச்சியில் கலந்துகொண்ட இளைஞர்கள் பலர் 'கோ கோத்தா கோ' என்று கோஷமிட்டனர்.

தற்போது நாடு பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில், மக்கள் அரசாங்கத்தின் மீது கடும் அதிருப்தியில் உள்ளனர். சமூக வலைத்தளங்களில் 'கோ கோத்தா கோ' என்ற வாசகம் ட்ரெண்டிங் ஆக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

## இரத்மலானை விமான நிலையத்தில் சர்வதேச விமான சேவை ஆரம்பம்

கொழும்பு,மார்ச் 28



இரத்மலானை விமான நிலையத்தில், 55 வருடங்களின் பின்னர் சர்வதேச விமான சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதலாவது சர்வதேச விமானம் நேற்றுக்காலை 8.40 மணிக்கு மாலைதீவில் இருந்து இரத்தலானை விமான நிலையத்தை வந்தடைந்தது. அதற்கு வரவேற்பளிக்கப்பட்டது.

இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையில் 50 இருக்கைகள் கொண்ட விமானம் சேவையில் ஈடுபடும். வாரத்துக்கு மூன்று முறை திட்டமிடப்பட்ட விமானங்கள் இயக்கப்படும். பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளுக்கும் இங்கிருந்து விமானப் பயணங்கள் முன்னெடுக்கப்படும்.

இலங்கையின் தனியார் விமான நிறுவனமான பிட்ஸ் ஏயார் நிறுவனமும், மாலைதீவு விமான சேவை நிறுவனமும் இணைந்து சேவைகளை நடத்தத் தீர்மானித்துள்ளன.

குறைந்த செலவிலான விமானப் பயணங்களை மேற்கொள்ள பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதற்கான நிதியை சிவில் விமான சேவைகள் அதிகார சபை, விமான நிலையம் மற்றும் ஏவியேஷன் நிறுவனம் முதலீடு செய்துள்ளது என்று சுற்றுலா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். (ம-4,இ)

## நிவாரணங்கள் வழங்கும் செயற்றிட்டம் விரைவில்

### மஹிந்த கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 28

நெருக்கடிகளுக்கு உள்ளாகி இருக்கும் மக்களுக்கு விரைவில் நிவாரணங்கள் வழங்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பத்திரமுல்லையில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டில் கஷ்டம் நிலவினாலும் மக்களின் நிவாரணங்களை குறைக்க எதிர்பார்க்கவில்லை. எவரும் விமர்சனங்களை முன்வைக்க முடியும். விமர்சனங்களை முன்வைக்கும் நபர்களிடம் பொறு[illegible] க[illegible]படைக்கும் [illegible] அ[illegible]ச் செய்ய [illegible] கில் [illegible] வரலாற்று [illegible] [illegible]டியான ச[illegible] ச[illegible]க்க முடியும் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்துக்கு ஆயுள் குறைவு!

## இரத்மலானை போராட்டத்தில் சஜித் இவ்வாறு தெரிவிப்பு!

**கொழும்பு, மார்ச் 28**

**அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் அரசாங்கத்துக்கு ஆயுள் நீண்டகாலம் இருக்கின்றது. ஆனால், மக்கள் மத்தியில் அரசாங்கத்துக்கு இருக்கும் ஆயுள் குறைவு - என்று தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.**



இரத்மலானையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போராட்டத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பு ரீதியாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் அரசாங்கத்தின் ஆயுள் நீண்டகாலமாக இருக்கின்றது. ஆனால், அவ்வளவு காலம் மக்கள் பொறுமையாக இருக்கமாட்டார்கள். அந்தளவுக்கு இந்த அரசாங்கம் மக்களைச் சோதித்துவிட்டது. மக்கள் மத்தியில் இந்த அரசாங்கத்தின் ஆயுள் குறைவாகத்தான் உள்ளது. தற்போதைய அராஜக அரசாங்கத்தைத் தோற்கடித்து நாட்டைக் கட்டியெழுப்பக் கூடிய குழுவொன்றுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும். என்னிடம் உள்ள குழுவினர் சிறந்த கற்றல் பின்னணி கொண்ட அனுபவமிக்கவர்கள். நாட்டைக் கட்டியெழுப்பும் சவாலை ஐக்கிய மக்கள் சக்தி நிச்சயமாக ஏற்றுக்கொள்ளும்- என்றார். (ம)

### தமிழகத்துக்கு

## அகதிகளாகச் செல்பவர்களுக்கு முகாமில் அடிப்படை வசதிகள்

சென்னை, மார்ச் 28

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக தமிழகத்துக்கு அகதிகளாக செல்பவர்களுக்கு, உதவி செய்வதற்காக மண்டபம் முகாமில் உள்ள 147 குடியிருப்புக்களில் அடிப்படை வசதிகளுக்கான முன்னேற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த 22ஆம் திகதி மன்னார், வவுனியா ஆகிய பகுதிகளிலிருந்து தமிழர்கள் 16 பேர் அகதிகளாக தனுஷ்கோடி சென்றனர்.

அவர்கள் மண்டபம் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மேலும் ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்கள், தமிழகம் வரலாம் என்பதாலேயே இந்தச் சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. (ம-14-27)

## அமைச்சர்களுக்கு இனி ஹெலிகொப்டரில்லை!



கொழும்பு, மார்ச் 28

பாதுகாப்பு அமைச்சின் விசேட அனுமதியின்றி, நாட்டின் பல்வேறு பகுதிகளுக்குச் செல்வதற்கு அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கு ஹெலிகொப்டர்கள் அல்லது விமானங்களை வழங்குவதை இடைநிறுத்த இலங்கை விமானப்படை தீர்மானித்துள்ளது.

தற்போதைய எரிபொருள் நெருக்கடி உள்ளிட்ட பல காரணங்களால், இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று விமானப்படைப் பேச்சாளர் துஷான் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தமது விமானப் பயணத்துக்காக இதுவரை 10 மில்லியன் ரூபாவுக்கு மேல் விமானப்படைக்கு வழங்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-4-இ)

### புத்தாண்டில்

## இனிப்பு வகைகளின் விலையும் உயரும்



கொழும்பு, மார்ச் 28

அனைத்து உணவுப் பொருள்களின் விலையும் வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளதால், புத்தாண்டு காலத்தில் இனிப்பு வகைகளின் விலையையும் உயர்த்த வேண்டியிருக்கும் என்று மிட்டாய் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

சீனி, அரிசி, பச்சைப்பயறு உள்ளிட்ட மிட்டாய்க்குத் தேவையான அனைத்துப் பொருள்களின் விலையும் உயர்ந்துள்ளது. இதனால் இனிப்புப் பொருள்களுக்கு உறுதியான விலை நிர்ணயம் செய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. எதிர்பாராதவிதமாக விறகின் விலையும் உயர்வடைந்துள்ளது. புறநகர்ப் பகுதிகளில் இருந்து மிட்டாய்களுக்கு அதிகளவு கிராக்கியுள்ள நிலையில், இந்த ஆண்டு அந்த வாய்ப்புக்கள் குறையும் என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ம-4-இ)

## துமிந்தவுக்கு திருமணம்

கொழும்பு, மார்ச் 28

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் துமிந்த சில்வா எதிர்வரும் ஜூன் மாதம் திருமண பந்தத்தில் இணையவுள்ளார். முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவின் பேச்சாளராக கடமையாற்றிய நிஷாரா ஜெயரட்ணவையே அவர் திருமணம் செய்யவுள்ளார் என்று அறியமுடிகின்றது. (ம-4-இ)

## சீனாவில் மருத்துவம் கற்ற 5,000 மாணவர்கள் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 28

சீனாவில் இருந்து நாடு திரும்பிய சுமார் 5 ஆயிரம் இலங்கை மருத்துவ மாணவர்கள், மீண்டும் தங்கள் படிப்பைத் தொடர முடியாத நிலையில் உள்ளனர்.

கொரோனாத் தொற்றுக் காரணமாக நாடு திரும்பிய மாணவர்கள், மீண்டும் சீனாவுக்குத் திரும்பிச்செல்ல முடியவில்லை. இதனால் அவர்கள் இணைய வழியில் தமது பயிற்சியைத் தொடர வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-4-இ)

## நீரில் மூழ்கி இருவர் சாவு!

சீதாவக்க ஆற்றின் யோகம பாலத்துக்கு அருகில் நீராடச் சென்றிருந்த இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. யாத்திரைக்குச் சென்ற இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். பெண்ணொருவர் நீராடச் சென்றிருந்த வேளையில் முதலில் நீரில் மூழ்கியுள்ளார்.

அவரைக் காப்பாற்ற முற்பட்டவரும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர்கள் ராஜகிரிய மற்றும் கொழும்பு 12 ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4-இ)

### கடும் வறட்சி காரணமாக

## காசல்ரீ நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் கடும் இறக்கம்


### வெளிவரும் ஆலயங்கள், கட்டடங்கள்

கொழும்பு, மார்ச் 28

மத்திய மலைநாட்டில் ஏற்பட்டுள்ள ... யில் தென்பட ஆரம்பித்துள்ளன.

காசல்ரீ நீர்த்தேங்கம் வரலாற்றுத் ... மையான சான்றுப்பொருள்களும் வெளியில் தெரிகின்றன.

சுற்றுலாவிகளும் உள்ளூர்வாசிகளும் நீர்த்தேக்கத்துக்கு அதிகாவில் ... வருகைதந்துள்ளனர் என்று ... நீர்த்தேக்கத்தின் பொறியியலாளர் ஒருவர் தெரிவித்தார். (ம-4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அரைகுறை...

றிரவு 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார். ஜனாதிபதியுடனான சந்திப்பு தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதியிடம் நாங்கள் தெரிவித்தோம். நியாயமான நிரந்தரமான - நடைமுறைப்படுத்தக்கூடிய அதியுச்ச அதிகாரப் பகிர்வு அடங்கிய ஒரு அரசியல் தீர்வு வராவிட்டால் அதை நாங்கள் ஏற்கமாட்டோம். இற்றை வரையில் நடைபெற்ற கருமங்களின் அடிப்படையில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளின் அடிப்படையில் நிரந்தரமான அரசியல் தீர்வைக் காணவேண்டும்.

இதற்காக அரசுடன் நாங்கள் வெளிப்படையாகத் தொடர்ந்து பேசத் தயார்.

தீர்வுக்கான எமது இந்த நிலைப்பாட்டில் நாங்கள் எப்போதும் உறுதியாக நிற்போம் என்றும், இதிலிருந்து ஒருபோதும் பின்வாங்கமாட்டோம் என்றும் ஜனாதிபதியிடம் கூறினோம்.

வடக்கில் அரச திணைக்களங்களாலும் இராணுவத்தாலும் அபகரிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதியிடம் கோரினோம். பேச்சின் பின்னர் அது தொடர்பில் அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது என அறிந்தோம். எனினும், காணிகள் தாமதமின்றி படிப்படியாக விடுவிக்கப்பட வேண்டும்- என்றார். (அ-ஒ,-22)

### விபத்தில்...

பத் தலைவர் நேற்று மதியம் உயிரிழந்துள்ளார்.


**S. N. R.ன் மறைவையிட்டு ஸ்ரான்லி (1955 - 1965) விடுதி உறவுகளின் உள்ளக் குமுறல்**



மிக நீண்டகாலமான எங்கள் நட்புகளை தேடித்தேடி இணைத்து விட்டு எங்கே சென்றாய் நாயகமே! சுகமாக எழுந்திருப்பாய் என்று எல்லோரும் ஆவலுடன் காத்திருக்க எங்களை மறந்து ஏமாற்றிவிட்டு பறந்துவிட்டாய். தாங்க முடியவில்லை. புலம்புகின்றோம். கொடும் விதியின் வழியே - என்று விழிநீர் சொரிந்து நிற்கின்றோம்.

உனது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர் மற்றும் நண்பர்களினதும் துயரத்தில் நாங்களும் பங்குகொள்ளுகிறோம்.

*ஓம் சாந்தி சாந்தி சாந்தி.*

**ஸ்ரான்லி பழைய விடுதி (1955 - 1965) நண்பர்கள்.**


கைதடி மேற்கைச் சேர்ந்த சீ.ரவிச்சந்திரன் (வயது - 55) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது:-

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 9 மணியளவில், கைதடி - கோப்பாய் வீதியில், கைதடி கலைவாணி வித்தியாலயத்துக்கு அருகில் இந்த விபத்து நடைபெற்றுள்ளது. மோட்டார் சைக்களில் சென்றவர் இந்த விபத்தை ஏற்படுத்தியுள்ளார். காயமடைந்த ரவிச்சந்திரன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு நேற்று மதியம் உயிரிழந்துள்ளார்- என்றனர். (அ-ஒ,159)

### இனந்தெரியாதோர்...

நவக்கிரியில் நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. அருந்தவராசா சயந்தன் (வயது - 30) என்ற இளைஞரே இவ்வாறு காணாமற் போயுள்ளார்.

சம்பவம் தொடர்பில் உறவினர்கள் தெரிவித்ததாவது:-

'வீட்டு வளவுக்குள் யாரோ பாய்ந்து நுழைந்துவிட்டு வெளியே செல்வதை அவதானித்த சயந்தன், வீட்டுக்கு வெளியே சென்று பார்த்தார். வெளியே சென்ற அவரை, வீட்டின் முன்புறம் உள்ள தோட்ட வெளியில் நின்றிருந்த மூவர் துரத்திச் சென்றனர். அதன்பின்னர் சயந்தன் வீடு திரும்பவில்லை. நாம் தேடியபோது அவரது கைபேசி வீட்டிலிருந்து சுமார் 400 மீற்றர் தூரத்தில் கண்டெடுக்கப்பட்டது.

அதேநேரம், கடந்த 12 ஆம் திகதி சயந்தனின் வீட்டுக்கு வந்து இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியிருந்தனர். அதில் வெட்டுக் காயத்துக்கு உள்ளான சயந்தனின் தந்தை தற்போதும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். அந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட இருவர் நேற்று முன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்' என்றும் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். சந்தேகத்தின் அடிப்படையில் சிலரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், விசாரணைகளின் பின்னரே மேலதிக தகவல்களைத் தெரிவிக்க முடியும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-26-23)

# மின் வழங்கல் சீராகும்வரை கட்டண உயர்வு ஒத்திவைப்பு

## அரசாங்கம் ஆலோசனை

**கொழும்பு, மார்ச் 28**

**தடையின்றி மின்சார விநியோகத்தை வழங்கும் வரையில் உத்தேச மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்காதிருப்பது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.**

இந்த விடயம் தொடர்பாக அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

தற்போது ஒரு மின் அலகு உற்பத்திக்கு 40 ரூபா செலவிடப்படுகிறது. எனினும், ஒரு மின் அலகுக்கு 8 ரூபாவுக்கும் குறைவான கட்டணமே அறிவிடப்படுகிறது.

இந்தநிலையில் தொடர்ந்தும் மின் விநியோகத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு உற்பத்தி செலவினங்களுக்கு ஏற்ற வகையில் கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டும் என யோசனை முன்வைக்கப்பட்டது.

அமைச்சரவையால் மின்சார சபையிடம் இருந்து மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனை கோரப்பட்டிருந்தது. இந்த யோசனை தற்போது அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டுள்ளது. ஆயினும் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் இதுவரையில் இறுதி தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை.

இதேவேளை- நீர்க் கட்டணத்தை அதி கரிப்பதற்கான யோசனை நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் நீர்வழங்கல் அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# மாணவன் மீது தாக்குதல் நடத்திய பெரமுன எம்.பி.

கொழும்பு, மார்ச் 28

பொதுஜன பெரமுனவின் குருநாகல் நாடாளுமன்ற உறுப்பினர் சமன்பிரிய ஹேரத் தன்னை தாக்கினார் என்று சட்டம் பயிலும் மாணவர் ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளார். குளியாப்பிட்டியில் உள்ள பாடசாலையொன்றின் முன்பாக இந்தச் சம்பவம் நடந்துள்ளது. தாக்குதலுக்கு இலக்கான மாணவர் குளியாப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முதலில் நாடாளுமன்ற உறுப்பினர் தனது நண்பனை தாக்கினார் என்றும், பின்னர் தன்னை தாக்கினார் என்றும் வாக்குமூலம் அளித்துள்ள மாணவன், நாடாளுமன்ற உறுப்பினரின் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்தவர்களும் தன்னைத் தாக்கினார்கள் என்றும் கூறியுள்ளார்.

அதேவேளை, நாரம்மல கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெற்றது. அப்போது அந்தப் பகுதி மக்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. அங்கிருந்த ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினரின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மீது கல் வீசித் தாக்கியுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினரும் அவரது மெய்ப்பாதுகாவலரும் தாக்கினர் என்று வேறு சிலரும் முறைப்பாடு செய்துள்ளனர் என்று தெரிவித்த பொலிஸார், தாக்குதலுக்கு இலக்கான ஐவர் குளியாப்பிட்டிய மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றனர் என்றும் தெரிவித்துள்ளனர். (எ-இ)


**உலகத் தமிழ் பல்கலைக் கழகம் அமெரிக்கா பட்டமளிப்பு விழா**



கொனிக்கா கலர் லாப் மற்றும் சிறிராம் ஜீவல்லர்ஸ்

உரிமையாளரும் தாயக அறக்கொடை நிறுவனத்தின் நிர்வாகியும்

**திரு.S.V.சிறிதரன்**

அவர்கள் 26.03.2022 அன்று கொழும்பிலுள்ள தாஜ்சமுத்ரா ஹோட்டலில் அமெரிக்காவின் உலகத்தமிழ் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட பட்டம் வழங்கும் விழாவில்

**"சமூக சேவைக்கான கலாநிதி" (Doctor of Social Service)**

பட்டத்தை பெற்றமைக்கு பெருமையுடன் பெருமை கொண்டு வாழ்த்துவோர்

விரசிங்கம் குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 27 . 04 . 1936



இறைவனடியில் 21 . 03 . 2022

## புனிதவதி திருஅருள்

யாழ். மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, மானிப்பாய் சூனாமலை, பிரித்தானியா Haverfordwest Wales ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட புனிதவதி திருஅருள் கடந்த (21-03-2022) திங்கட்கிழமை இறைவனடி அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான மாணிக்கம்(இலங்கை புகையிரத பொறியியலாளர்) சரஸ்வதி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (வட்டுக்கோட்டை தபால்சேவை அத்தியட்சகர்) இரத்தினம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திருஅருள்(பல் வைத்தியர்) அவர்களின் அன்பு மனைவியும், சத்தியேந்திரன் (England), பவானி (Wales) ஆகியோரின் அன்புத் தாயாரும், டாக்டர் ஆதித்தன் (Wales) அவர்களின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான டாக்டர் ஜெகநாதன், கைலைநாதன் (கணக்காளர்) மற்றும் விஸ்வநாதன் (ஓய்வுபெற்ற டாக்டர்- லண்டன்), சௌபாக்கியலஷ்மி சிவஞானம் (ஓய்வுபெற்ற சங்கீத வித்துவான்- யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நிகேதன் (பொறியியலாளர் UK), நிவேதா ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

**நிகழ்வுகள்**

**பார்வைக்கு:** • Wednesday, 30 Mar 2022 12:30 PM - 1:30 PM
• Roy Folland and Son Funeral Directors 27-29 Cartlett, Haverfordwest SA61 2LH, United Kingdom

**கிரியை:** • Wednesday, 30 Mar 2022 1:45 PM - 3:15 PM
• Roy Folland and Son Funeral Directors 27-29 Cartlett, Haverfordwest SA61 2LH, United Kingdom

**தகனம் :** • Wednesday, 30 Mar 2022 4:00 PM
• Parc Gwyn Crematorium Parc Gwyn, Narberth SA67 8UD, United Kingdom

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**மகள்** - Mobile : +447 4865 43985 (Wales)
**சகோதரி - இல. 11, பொன்னப்பா ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்**

(cs 19047) (2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 10 . 1938



மறைவு 21 . 03 . 2022

## திருமதி கமலாதேவி தியாகராசா

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி தியாகராசா கடந்த (21.03.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - பூரணம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான சுப்பையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தியாகராசா (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் - கச்சேரி) அவர்களின் பாசமிகு மனைவியும், வத்சலா (நோர்வே), காலஞ்சென்ற நிர்மலா மற்றும் சுதாகர் (லண்டன்), சசிகலா (நோர்வே), சியாமளா (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், கைதம்பிள்ளை (நோர்வே), விசாலினி (லண்டன்), உதயகுமார் (நோர்வே), சுரேஸ்குமார் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற S.S. சண்முகநாதன் மற்றும் தியாகராசா (ஓய்வுபெற்ற இலங்கை மின்சார சபை உத்தியோகத்தர்), காலஞ்சென்ற செல்வராசா மற்றும் சோதிராசா (பிரான்ஸ்), சத்தியசீலன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மாணிக்கவாசகர் (லண்டன்), பாலசுந்தரம் (கனடா), செல்வரத்தினம் (ஓய்வுபெற்ற Commercial Bank உத்தியோகத்தர்), காலஞ்சென்ற தவயோகேஸ்வரி மற்றும் சந்திரபவானி, காலஞ்சென்ற வசந்தகுமாரி மற்றும் இந்துமதி (பிரான்ஸ்), சுகுணவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், லூட்ஸ் நிரோஜா ( நோர்வே), டிலக்சன், வர்ஷா, சிந்துஜா (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2022) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் 113, சந்தனமாதா வீதி, அரியாலை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**113, சந்தனமாதா கோயில் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.**

(cs 43798) (2.6)

**தகவல்: குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 03 . 1932



மறைவு 26 . 03 . 2022

## செல்லத்துரை லட்சுமி

யாழ். சாவகச்சேரி மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை லட்சுமி நேற்றுமுன்தினம் (26.03.2022) சனிக்கிழமை இறைபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னதம்பி - செல்லத்துரை அவர்களின் பாசமிகு மனைவியும், பராசக்தி, துரைசிங்கம், சந்தனராசா, நவரட்ணம், பாக்கியநாதன், கமலநாதன் (சுவிஸ்), செல்வநாதன், பத்மநாதன் (சுவிஸ்), பூபதி (சுவிஸ்), திசைநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சின்னத்தம்பி, வள்ளியம்மை (மாசிலா), சிறிலதா, செல்வராணி, பாக்கியம், ஜெயசிறி, விக்கினேஸ்வரதேவி, சாந்தி, கனகலிங்கம், சுமதி ஆகியோரின் பாசமிகு மாமியும், கலாவாணி, ஜெயவாணி, முருகதாஸ், துஷ்யந்தினி, துஷாலினி, பிரதீப், பிரகாஸ், பிராசாந்தி, பிரசாந்தன், யோகேஸ்வரன், கலாயினி, கயேந்திரன், யாழினி, சாமினி, கேஜா, ரஜீவ், ரேகா, யெகதா, சுகந்தா, திவாகரன், சாகித்யா, பவித்யா, இந்திரஜி, நிவாஸ், நிக்ஷனா, தாரணி, சபிதன், சபிதா, பிரதீப், பிரசாந்தன், பிரசோந், திபாணா, திபின், திஷானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் [illegible] நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காந்தாளம் பிட்டி [illegible]


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

077 664 8673

# மரண அறிவித்தல்

தோற்றம் 06 - 01 - 1944



மறைவு 24 - 03 - 2022

## நடராசா இராஜநாயகம்

(ஓய்வுபெற்ற சைகைத்தொலைத் தொடர்பு பகுதி உத்தியோகத்தர் – புகையிரத திணைக்களம், ஓய்வு பெற்ற பட வரைஞர் Euroville Engineers and Constructors (PVT) Ltd.)

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா இராஜநாயகம் (ஓய்வுபெற்ற சைகைத்தொலைத் தொடர்பு பகுதி உத்தியோகத்தர் - புகையிரத திணைக்களம், ஓய்வு பெற்ற பட வரைஞர் Euroville Engineers and Constructors (PVT) Ltd.) அவர்கள் கடந்த (24-03-2022) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா நாகேஸ்வரி தம்பதியினரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற தர்மலிங்கம் குணமணி தம்பதியினர் மற்றும் செல்லம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், லீலாவதியின் அன்புக் கணவரும், தனஞ்சன் (UK), ஜனா (டாக்டர், கொழும்பு தேசிய வைத்தியசாலை), சயந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன், சரஸ்வதி, துரையப்பா ஆகியோரினதும் புவனேஸ்வரி, யோகேஸ்வரி, நீற்றா (UK) ஆகியோரினதும் அன்புச் சகோதரனும், தியாகலிங்கம் (UK) றஞ்சி ஆகியோரினதும் காலஞ்சென்றவர்களான துவாரகாம்பாள், வெற்றிவேல் (பளிங்கு) ஆகியோரினதும் அன்பு மைத்துனரும், பாலதர்மேந்திரன் (செலான் வங்கி - வவுனியா), லக்ஷனா (UK), பங்கஜம் (கனடா) ஆகியோரின் அருமை மாமனாரும் பிரவின், பிரண்யன், அஸ்விகா, அரவின் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2022) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் கந்தக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**"லீலகிரி"
கோப்பாய் மத்தி, கோப்பாய். 021 223 0151**

**தகவல் : குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

எமது நிறுவனமாகிய Advanced Technology System" 2019 ஆம் அண்டு முதல் 2022.02.28 வரை திருத்தம் செய்வதற்கு வழங்கிய உபகரணங்களை இதுவரை மீள பெற்றுக் கொள்ளா தவர்கள் எதிர்வரும் சித்திரை மாதம் 02 ஆம் (02.04.2022) திகதிக்கு முன்னர் தகுந்த ஆதாரங்களை காட்டி பெற்றுக் கொள்ளவும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மீள பெற்றுகொள்ளாத பொருட்களுக்கு எமது நிறுவனம் பொறுப்பு ஏற்காது. (CS 43788) (3/6)

**021 221 9330, 076 781 7831**



### வீடு வாடகைக்கு தேவை

நல்லூர்/ கச்சேரி/ அரியாலை போன்ற பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை.

(CS 19048) (4/6) 077 839 5849




## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த (27.02.2022) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் முருகன் ஜெயம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (29.03.2022) செவ்வாய்க்கிழமை காலை 05.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் காலை 6.00 மணியளவில் கரைக்கப்படும். அதனைத்தொடர்ந்து நடைபெறவிருக்கும் சபிண்டீகரண நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

கலாவாணி ச.ச.நி<br>
கம்பர்மலை.

குடும்பத்தினர்<br>
077 103 3193, 076 556 9574

(cr.37720) (2.6)


## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

### சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இந்தியன் செலக்ஷனின்

#### ஆடைத் தெரிவுகள்

- திருமண பட்டுச் சாறிகள்,
- கொட்டன் சாறிகள்,
- சல்வார்கள்,
- சல்வார் துணிகள்,
- புரொக்ஸ், வெஸ்ரேன் டொப்,
- மொடர்ன் ரெஸ், சேட், ரீ சேட்,
- ரவுஸர்கள்,

என ஏராளமான மனங்கவர், ஆடைத்தெரிவுகளோடு...



இம்முறை சித்திரைப் புத்தாண்டை இந்தியன் செலக்ஷனுடன் கொண்டாட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்<br>
காலம்: 19.03.2022 - 14.04.2022 வரை

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்


வரலாற்றுச் சிறப் புமிக்க நாவாந் துறை குருசடித்தீவு புனித அந்தோனி யார் ஆலய வரு டாந்த திருவிழாவும் திருச்சொரூபப் பவ னியும் நேற்றுமுன் தினம் இடம்பெற் றன. யாழ். மறை மாவட்ட குருமுதல் வர் ஜெபரட்ணம் அடிகளார் தலைமை யிலான பங்குதந் தையினர் திருப்ப லியை ஒப்புகொடுத் தனர். (ச-27)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்


யாழ், மார்ச் 28

இந்து சமய, கலா சார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், கிளி நொச்சி வன்னே ரிக்குளம் ஆனை விழுந்தான் முத் துமாரி அம்பாள் ஆலயத்தில் நாளை காலை 6.30 மணிக்கு அருளாசி உரை யும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெற வுள்ளன.

இதன்போது சிவஸ்ரீ பாலசஜீவகு ருக்கள் அருளாசி உரையும், வேதபா ராயணத்தையும் நிகழ்த்தவுள்ளார். (ச)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 . 09 . 1975



மறைவு 31 . 03 . 2019

7ஆம் வட்டாரம் புங்குடுதீவினைப் பிறப்பிடமாகவும் பள்ளம்புலம் சரவணை கிழக்கினை வாழ்விடமாகவும் கொண்ட

### அமரர் நல்லதம்பி சசிதரன்

(துபால் அலுவலகம், புங்குடுதீவு)

நாளது ஒன்று இரண்டாய்<br>
நகர்ந்துமே ஆண்டு மூன்று<br>
ஆனதோ அப்பா.....? எம்மை<br>
ஆழ்கடல் மூழ்க விட்டு....!

போனதேன் ஐயா...? இன்னும்<br>
போனதாய் அறியாவண்ணம்<br>
கூடிய இனிய நாள்கள் - உம்<br>
குரலது கேட்ட காலம்<br>
போவதாய் இன்னும் இல்லை<br>
போய்விடும் உறவும் இல்லை....!

ஆயினும் எம்முன் நீங்கள்<br>
அமர்ந்திடாப் பொழுது இன்றாய்<br>
வாடிட வைக்குதப்பா<br>
வதைக்குதே உள்ளந்தன்னை....!

மீளநாம் முன்நாள் போன்று<br>
மிகுதியாம் உவகை கொள்ளும்<br>
காலமும் கூடுமாப்பா...? எம்<br>
கடவுளே அமைதி கொள்வீர்<br>
ஓம் சாந்தி...! சாந்தி...! சாந்தி...!

பள்ளம்புலம்<br>
சரவணை கிழக்கு<br>
9ம் வட்டாரம், (cs.19018) (2.6)

என்றும் உங்கள் நினைவுகளுடன்<br>
வாழ்ந்து கொண்டிருக்கும்<br>
குடும்பத்தினர்

## நெஞ்சை விட்டகலாத 13 ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 16.08.1976



இறப்பு 28.03.2009

### கனகரத்தினம் சுரேஸ்குமார் (சுரேஸ்)

(பணியாளர் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலை)

நெடுந்தூர வாழ்க்கைப் பயணம்<br>
பாதி வழியில் விலகியது ............<br>
காலங்கள் கனவாகிப் போனதால்<br>
என் கண்ணீர்த் துளிகளின் ஈரம்,<br>
இன்னும் காயவில்லை வருடங்கள்<br>
13 ஆகிய போதிலும், வாழும் காலம்<br>
வரை உம்நினைவுகளோடு ............

பிறப்பு 17.05.1984



இறப்பு 13.03.2009

### கந்தையா ஜெயக்குமார் (ஜெயம்)

அன்புத் தம்பியே பூமியில் வாழும்<br>
காலம்வரை புரட்சியாளனாய், ஊர்<br>
போற்றும் உத்தம வீரனாய் வாழ்ந்தாய்<br>
நீயின்றி 13 ஆண்டுகள் ஆன போதிலும்<br>
கலங்கி நிற்கின்றோம் நாம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

[illegible] (மதி), அப்பா, அம்மா, சகோதரங்கள்,<br>
தாவளை இயற்றாலை, வரணி.

(cr.37705) (3.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு உண்டு

அரியாலை சித்தி விநாயகர் கோவிலுக்கு முன் இருக்கும் அருளம்பலம் ஒழுங்கை, நெடுங்குளம் வீதி 4இல் புதிதாக கட்டப்பட்ட வீட்டின் மாடிப்பகுதி வாடகைக்கு உண்டு. அலுவலகம் ஆகவும் அலுவலக உத்தியோகத்தவருக்கும் பொருத்தமாக இருக்கும். 3அறைகள், சமையலறை, Hall, Common Bathroom and Hot Water Attach Bathroom முன், பின் பக்க பல்கனி வசதியும்

**074 216 8717**

## வீடு வாடகைக்கு தேவை

நல்லூர் கோவிலுக்கும் கச்சேரியடிக்கும் இடைப்பட்ட 2km சுற்று வட்டாரத்திற்குள் 4 பேர் கொண்ட குடும்பத்திற்கு வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. (CS19105) (4/6)

**077 546 5577**




தியத்தலாவையில் நேற்றுமுன் தினம் நடந்த வாகன விபத்தில் 17 வயதான யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தியத்தலாவையிலிருந்து பண்டாரவளை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் எதிரே வந்த நோயாளர் காவு வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற நபரும், உடன் பயணித்த யுவதியும் படுகாயமடைந்த நிலையில், தியத்தலாவை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

விபத்தில் படுகாயமடைந்த யுவதி சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

(எ-இ)

## மரண அறிவித்தல்

### நவரத்தினம் ஸ்ரீகாந்தா



யாழ். மல்லாகம் நீலியம்பனைப்பிள்ளையார் கோவிலடி தில்லையம்பதியைப் பிறப்பிடமாகவும், சிவகாந்தபதியை வசிப்பிடமாகவும், அச்சுவேலி வளலாயை வதிவிடமாகவும் கொண்ட நவரத்தினம் ஸ்ரீகாந்தா அவர்கள் 24-03-2022 வியாழக்கிழமை அன்று கனடா Scarborough வில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் நவரத்தினம் (காணி இலாகா உத்தியோகத்தர்- யாழ். கச்சேரி) சிவபாக்கியம் தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான அச்சுவேலி வளலாயைச் சேர்ந்த ஆறுமுகம் கணபதிப்பிள்ளை(பிரபல வர்த்தகர்- வினாயகர் ஸ்ரோர்ஸ்) செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், அருந்தவநாயகி அவர்களின் அன்புக் கணவரும், மாதுளன்(Max, சென்ரானியல் College, றைசன் யூனிவேர்சிற்றி பழைய மாணவர்- Bell Canada), மாதுஜன்(MATT, சென்ரானியல் College, யோக் யூனி வேர் சிற்றி பழைய மாணவர் C.T.B.C Bank) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான குலசேகரம், மனோரஞ்சிதம் மற்றும் அரியரட்ணம், தவமணிதேவி(கனடா), ஸ்ரீறங்கநாதன்(கனடா), குணரட்ணம் (ஜேர்மனி), யோகேஸ்வரி, ஜெயரட்ணம்(கனடா), காலஞ்சென்ற பகவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 29.03.2022ஆம் திகதி Chapel Ridge Funeral Home & Cremation Centre, கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
சகோதரி,
மருமக்கள்

சிவகாந்தபதி,
மல்லாகம்.

(CS 19049) (4/6)

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 - 03 - 1935



மறைவு 26 - 03 - 2022

### பொன்னம்பலம் வீரபத்திரன்

(முன்னாள் பிரதிக் கல்விப்பணிப்பாளர்)

காதி அபூபக்கர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் வீரபத்திரன் (26.03.2022) சனிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் பொன்னம்பலம்-மாணிக்கம் தம்பதியரின் மகனும், சின்னத்துரை-மீனாட்சி மற்றும் செல்லையா-பராசக்தி தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவகுமாரன் மற்றும் குமுதினி ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr.க.சுந்தரலிங்கத்தின் (நீர்கொழும்பு மாவட்ட பொது மருத்துவமனை) அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான கோபாலபிள்ளை, நெல்லிநாதன், பராசக்தி, கெங்காதரம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், லோகேஸ்வரியின் அன்பு மைத்துனரும், வே.கிருஸ்ணானந்தனின் அன்பு சகலனும், ஆரணன் (M.Sc.Eng.) ஆரூரன் (M.Sc IT) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (27.03.2022) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

193, காதி அபூபக்கர் வீதி,
யாழ்ப்பாணம்

(CS 19106) (4/6)

தகவல்
குடும்பத்தினர்
021 222 5450

## மரண அறிவித்தல்

தோற்றம் 31 - 05 - 1950



மறைவு 24 - 03 - 2022

### கனகலிங்கம் ஆனந்தராணி

அரசடி, நல்லூர், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகலிங்கம் ஆனந்தராணி அவர்கள் (24.03.2022) வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் துரையப்பா கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், ஆசை பாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகளும், கனகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், ராஜினி (கருணா), வசந்தகுமார், மகிழ்ஜினி (ஆஷா), அசோக்குமார் (அசோ, சபரீஸ் ஹாட் வெயார் உரிமையாளர்), உதயகுமார் (உதயன்), நிறோஜினி (றோசி), வசிகரன் (விபித்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஸ்ரீபாஸ்கரன், வனஜாதேவி, சிறிதர், விஜயா, தாரனி, அருள்மாறன் (உரிமையாளர் APPLE COMPUTER NETWORKS,AR CCTV SOLUTION), மது ஆகியோரின் அன்பு மாமியும், பேபிசறோசா, பவானி, ஈசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுஜீஸ்கரன், சுரேக்கா, அஜீவ், கிஷோத், டனிஸ்ரன், டசிந்தன், டிலக்சன், பவிசன், அபிசன், தாருக்கா, தனுஷ்கா (சபரி), அரோஜிதன், லேகா, ஜெரூப் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.03.2022) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்: குடும்பத்தினர்

ஸ்ரீபாஸ்கரன்:- 0041 779168644 (சுவிஸ்)
வசந்தன்:- 0041 797260996 (சுவிஸ்)
சிறி:- 0041 68226874 (கனடா)
உதயன்:- 0044 7824479610 (லண்டன்)
அசோ:- 0094 779681095 (இலங்கை)
அருள்மாறன்:- 0094 772487234 (இலங்கை)

(CS 18704) (4/6)

## மரண அறிவித்தல்

தோற்றம் 03 - 09 - 1975



மறைவு 27 - 03 - 2022

### பாலதுரை உதயநிருபன் (சின்னா)

Udheya and Company (Partner) Olliyamullai Wettala

இல.54 பங்களாவத்தை றோட் மாபோல வத்தளையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலதுரை உதயநிருபன் (சின்னா- Udheya and Company (Partner) Olliyamullai Wettala) நேற்று (27.03.2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலதுரை தங்கலட்சுமி தம்பதிகளின் புதல்வனும், கிஸ்ணவேணி (சிங்கபாதை) மோகனசொருபன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் சகோதரனும், அஜந்தாவின் அன்பு கணவரும், கருணானந்தராசா உகந்தமலர் அவர்களின் மருமகனும், ஷர்விந், லிபியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.03.2022) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு மூளாய் றோட், வட்டுக்கோட்டையில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக வட்டுக்கோட்டை கொத்துத்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
077 5328742

(CS 19107) (4/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலம்பெயர்...

புலம்பெயர் தமிழர்கள் முதலீடு செய்ய வரவேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்திருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பிலும் இதனைச் சுட்டிக்காட்டியிருந்தார். ஆனால் புலம்பெயர் தமிழர்கள் மற்றும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீது ராஜபக்ச அரசு ஆட்சிக்கு வந்ததும் தடைகளை விதித்திருந்தது. இந்த நிலையில் புலம்பெயர் தமிழர்கள் எவ்வாறு நாட்டுக்குள் வருவது ?என்று கொழும்புச் செய்தியாளர் ஒருவர், வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

'புலம்பெயர் தமிழர்கள் மற்றும் புலம்பெயர் அமைப்புக்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளை அரசு மீள் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கின்றது. கூட்டமைப்புடனான சந்திப்பின்போதும் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது' என்று பீரிஸ் குறிப்பிட்டார்.

மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான சமரசப் பேச்சை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தொடர்ந்து முன்னெடுப்பார். இந்தப் பேச்சுகள் மூலம் தமிழ் மக்களின் மனதை அவர் வெல்வார். சம்பந்தன் சிறந்த மூத்த அரசியல்வாதி. அவர் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் ராஜபக்ச தலைமையிலான அரசு ஆரம்பித்துள்ள பேச்சை உள்நாட்டில் உள்ளவர்களும், வெளிநாட்டுத் தூதுவர்களும் வரவேற்றுள்ளனர்.

அரசியல் தீர்வு உள்ளிட்ட 5 விடயங்கள் தொடர்பில்ஜனாதிபதியும்கூட்டமைப்பினரும் திறந்த மனதுடன் பேச்சை ஆரம்பித்துள்ளனர். இது ஆட்சியைப் பிடிக்கத் துடிக்கும் எதிரணியினருக்குப் பேரிடியாக அமைந்துள்ளது, என்றும் பீரிஸ் சுட்டிக்காட்டினார். (அ-ஒ-5,22)

## கூட்டமைப்பையும்...

மைப்பு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி உள்ளிட்ட கட்சிகளுடன் அவர் பேச்சு நடத்துவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பு இன்று மாலை 4.30 மணியளவில் கொழும்பிலுள்ள இந்தியன் இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ள மாட்டார் என்று அறியமுடிகின்றது. ஜனாதிபதியுடனான சந்திப்பு முடிவடைந்த பின்னர் நேற்றுமுன்தினம் அவர் யாழ்ப்பாணம் வந்துள்ளார். இந்த நிலையில் வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்புத் தொடர்பில் அவருக்கு நேற்று மதியமே தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் அவர் இன்றைய சந்திப்பில் பங்கேற்க மாட்டார். (அ-ஒ,5)

## பொறுப்பேற்க...

யத் தயாராகவுள்ளேன்-இவ்வாறு முன்னாள் பிரதமரும், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

'சர்வகட்சி மாநாட்டில் நீங்கள் கலந்து கொண்ட பின்னர், மக்கள் மத்தியில் ஓர் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. இந்தப் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்கக் கூடியவராக தங்களைக் கருதுகின்றார்கள். இவ்வாறான சூழலில், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும், தங்களை இடைக்கால அரசின் பிரதமராக நியமிக்க முயன்றுவருவதாகவும் அதற்கு முன்னோடியாகவே அன்றைய கூட்டத்தில் தங்களிடம் மன்னிப்புக் கோரியதாகவும் கூறப்படுகின்றது. அவ்வாறான முயற்சிகள் இடம்பெறுகின்றனவா? அவ்வாறான பொறுப்பு உங்களிடம் முன்வைக்கப்பட்டால் நீங்கள் பதவியை ஏற்றுக்கொள்வீர்களா?' என்று கொழும்புச் செய்தியாளர் ஒருவர் ரணில் விக்கிரம சிங்கவிடம் கேள்வி எழுப்பினார்.

அதற்கு அவர், 'நாட்டினதும் மக்களினதும் நலன் கருதியே சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்றேன். இந்த மாநாட்டைக் கூட்டச் சொல்லி பல மாதங்களுக்கு முன்னரே அரசிடம் கோரியிருந்தேன். காலம் தாழ்த்தியாவது மாநாட்டைக் கூட்டி பிரச்சினைகளை ஆராய்ந்திருக்கின்றார்கள். எனது நிலைப்பாடுகளை வெளிப்படுத்தியுள்ளேன். அரசாங்கம் எடுக்கப்போகும் நடவடிக்கைகளை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

இடைக்கால அரசாங்கம் தொடர்பாக அரசதரப்பில் இருந்து நேரடியாக என்னுடன் யாரும் எதுவும் பேசவில்லை. அப்படியான வேண்டுதல்கள் முன்வைக்கப்பட்டால் பரிசீலித்து முடிவெடுப்பேன். நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் எதையும் செய்யத் தயாராகவுள்ளேன்-என்றார் ரணில். (அ-ஒ,5,22)

## ரணிலுக்கு...

ரணில் விக்கிரமசிங்க விடுத்த கோரிக்கையை ஆளும் கட்சி ஏற்றுக்கொண்டுள்ளதாக, அந்தக் கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

## எரிவாயுவை...

தகவல் வழங்குமாறு அந்த நிறுவனம் கோரியுள்ளது. 0112 505 808 எனும் தொலைபேசி இலக்கம் அல்லது 1311 எனும் துரித அழைப்பு இலக்கத்துக்கு அழைத்து தகவல் தருமாறு லிட்ரோ நிறுவனத்தின் முகாமையாளர் சாரங்க விஜேசிங்க கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை, சமையல் எரிவாயு விநியோக நடவடிக்கைகளின்போது முன்னெடுக்கப்பட்டதாகக் கூறப்படும் மோசடிகளை கருத்திற்கொண்டு மத்திய மாகாணம், ஊவா மாகாணம் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் செயற்பட்ட 6 முகவர்கள் இடை நிறுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-ஒ-இ)

## ஏப்.5...

என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. ஏப்ரல் 5 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் சூரியன் உச்சம் கொடுக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

## பொலிஸ்....

ளது. கோண்டாவில் கிழக்கில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் பொலிஸ் தரப்பினர் வெளியிட்ட தகவலில், தாக்குதலை மேற்கொண்ட இளைஞர் குழுவுக்கும், பொலிஸ் உத்தியோகத்தருக்கும் இடையில் இறப்பு வீடொன்றில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாகவே அவரது வீடு தாக்கப்பட்டுள்ளது. 10 பேர் கொண்ட குழுவினர், வீடு புகுந்து கண்ணாடிகளை அடித்து உடைத்துள்ளனர். தளபாடங்களை கொத்தி சேதப்படுத்தியுள்ளனர், என்று குறிப்பிட்டனர். கோப்பாய் பொலிஸார் விசாரணை களை ஆரம்பித்துள்ளனர். (அ-ஒ-23)

# மகனைக் கடத்தி கப்பம் கோரினர்

## பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என்கிறார் தாய்

வவுனியா, மார்ச் 28

மகன் கடத்தப்பட்டு 2 மாதங்கள் ஆகின்றன. ஒரு தரப்பினர் கப்பமும் கோரினர். இந்த விடயங்களை எல்லாம் பொலிஸாரிடத்தில் ஆதாரங்களுடன் ஒப்படைத்தேன். இருந்தும் இதுவரையில் எனது மகன் மீட்கப்படவில்லை என்று கடந்த ஜனவரி 27 ஆம் திகதி காணாமற்போன பாலகிருஸ்ணன் நிரேஸ் என்ற இளைஞனின் தாயார் திருமதி கணேஸ் பாலகிருஸ்ணன் தெரிவித்தார்.

வவுனியா நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மகன் வீட்டிலிருந்து புறப்பட்டு குருமன் காட்டிலுள்ள வர்த்தக நிலையத்துக்கு முன்னால் தனது மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு வர்த்தக நிலையத்துக்குள் மாலை 5.02 மணிக்கு சென்றுள்ளார். அதன் பின்னர் வர்த்தக நிலையத்திலிருந்து வெளியே வரவில்லை. அன்று இரவு 6.47 மணிக்கு வேறு ஒருவர் அவனது மோட்டார் சைக்கிளை அங்கிருந்து எடுத்துச் சென்றதை சி.சி.ரி.வி. காட்சிகளில் காண முடிகின்றது.

எனது மகனைக் காணவில்லை என முறைப்பாடு செய்தேன். ஆனால் எனது மகன் இரண்டு நாளாக வீட்டுக்கு வரவில்லை என்று முறைப்பாட்டு எழுதப்பட்டுள்ளது.

செட்டிகுளத்திலிருந்து ஒருவர் என்னிடம் 15 இலட்சம் கப்பம் கோரினார். மூன்றரை இலட்சம் உடனடியாக தந்தால் மகனை விடுவதாகக் கூறினார். அவர் பொலிஸ் முறைப்பாட்டு துண்டின் பிரதி, மகனின் ஒளிப்படம், வன்னி மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபனின் கடிதம் என்பவற்றை தருமாறும் கோரினார். குறித்த நபரின் குரல் பதிவையும் பொலிஸாரிடம் கொடுத்தோம். அதனடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார். போதிய ஆதாரம் இல்லை என அவரை பொலிஸார் விடுவித்துள்ளனர். ஆனால் அந்த நபரை விசாரித்தால் எனது மகனைக் கண்டு பிடிக்க முடியும்.

எனது மகன் குருமன்காட்டிலுள்ள குறித்த வர்த்தக நிலையத்தில் தனது இரண்டரை வருட உழைப்புப் பணத்தை வழங்கியுள்ளார். வர்த்தக நிலையத்தின் முகாமையாளரிடம் 85, 90 இலட்சம் ரூபா வரை செலுத்தியுள்ளார். தனது 30 ஆவது வயதில் மகன் புதிய தொழில் செய்யத் திட்டமிட்டு இருந்தார். அந்தப் பணத்தை திரும்பக் கேட்டு சென்ற போது தான் அவர் கடத்தப்பட்டுள்ளார்.

எனது மகனைப் பிடித்து வைத்திருக்கிறார்கள். அவரை வைத்து என்ன செய்கிறார்களோ தெரியாது? எனது மகனின் மோட்டார் சைக்கிளும் இதுவரை இல்லை. அவரது வங்கி அட்டைகளும் இல்லை. அவரது வங்கிப் கணக்கு விவரங்களையும் பொலிஸாரிடம் கொடுத்தோம். அவர்கள் பார்க்கிறோம் என்கிறார்கள். ஆனால் எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை. வர்த்தக நிலையத்துக்குச் சென்ற நிலையிலேயே அவரைக் காணவில்லை. அதன் உரிமையாளர் மற்றும் முகாமையாளர் தான் இதற்கு பதில் சொல்ல வேண்டும்.

எனது மகன் தனது நண்பர் ஒருவரின் 5 இலட்சம் ரூபா பணத்தை வாங்கி குறித்த வர்த்தக நிலையத்துக்கு கொடுத்திருந்தார். எனது மகன் காணாமற்போன பின் பணத்தை வழங்கிய எனது மகனின் நண்பன், குறித்த வர்த்தக நிலையத் துக்குச் சென்று தனது 5 இலட்சம் ரூபா பணத்தை தருமாறு கோரினார். இதன் போது எனது மகன் கொடுக்கச் சொன்னது என்று கூறி 5 இலட்சம் ரூபா பணத்தைக் கொடுத்துள்ளனர். எனது மகன் காணாமற்போன பின் தான் இந்தச் சம்பவம் நடந்தது. மகன் பணத்தை எப்போது கொடுக்கச் சொன்னார் என்பதை அறிய வேண்டும்.

பொலிஸாரிடம் சகல ஆவணங்களையும், எங்களால் திரட்டப்பட்ட ஆதாரங்களையும் ஒப்படைத்துள்ளோம். ஆனால் இதுவரை காலமும் விசாரணை நடக்கின்றது என்று சொல்கிறார்களே தவிர மகனைக் கண்டுபிடிக்கின்றார்கள் இல்லை-என்றார். (அ-ஒ,110)

## கலாசார....

யம் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகம் மேற்கொண்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான நிலத்தில் இந்திய அரசால் 100 கோடி இந்திய ரூபாவில் இந்தக் கலாசார மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலாசார நிலையம் இன்று முழுமையாகத் திறக்கப்படாது என்று அறியமுடிகின்றது. அத்துடன் சம்பிரதாயபூர்வமாக இன்று திறக்கப்பட்டாலும், இதனைப் பராமரிப்பது யார் என்பது தொடர்பில் இன்னமும் இறுதி முடிவு எட்டப்படாமல் இழுபறி நிலை நீடிக்கின் றது. அத்துடன் எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவிலேயே இது முழுமையாக ஒப்படைக்கப்படும் என்று தெரிய வருகின்றது. (அ-ஒ-5)

# வீடு புகுந்து தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச் 28

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுதுமலை தெற்கு, இரும்புக்காரன் வீதியைச் சேர்ந்த சிவானந்தன் சஜிரதன் என்பவர் மீது நேற்று அதிகாலை 2.30 மணியளவில் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வர், அவரது வீட்டுக்குள் உள்நுழைந்து தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-ஒ-27)

# கடனுக்கு கடன்!

கொழும்பு, மார்ச் 28

சீனாவிடம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலரை இலங்கை கடனாகக் கோரியிருந்த நிலையில், அந்தக் கடன் தொகை, கடந்த காலங்களில் சீன வங்கிகளிடமிருந்து கடந்த காலத்தில் பெறப்பட்ட கடன் தொகையை திருப்பிச் செலுத்துவதற்கானது என்று கொழும்பு சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. வாங்கிய கடனைச் செலுத்த மீண்டும் கடன் வாங்கும் நடவடிக்கையை இலங்கை முன்னெடுத்துள்ளதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலுக்கு எதிராக குற்றப்பத்திரிகை!

கொழும்பு, மார்ச் 28

கடந்த அரசாங்கத்தின் ஊழல் ஒழிப்பு குழு மற்றும் செயலகம் என்பன குறித்து விசாரணை செய்த விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வுக்கு எதிராக 12 விடயங்களைக் கொண்ட குற்றப்பத்திரிகையை முன்வைத்துள்ளது.

அதில் மூன்று குற்றச்சாட்டுக்கள் தேசிய நிறைவேற்றுக் குழு, ஊழல் ஒழிப்புக் குழு மற்றும் ஊழல் ஒழிப்புச் செயலகம் என்பன உருவாக்கப்பட்டமை தொடர்பில் சுமத்தப்பட்டுள்ளன. அந்த மூன்று குழுக்களை நிறைவேற்றுவதற்கு ஒத்தாசை வழங்கியமை ஊடாக முன்னாள் பிரதமர் அரசமைப்பை மீறியுள்ளார் என்று ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு குற்றஞ் சாட்டியுள்ளது. (எ-இ)

# 17 வயது யுவதி விபத்தில் உயிரிழப்பு

தியத்தலாவையில் நேற்றுமுன்தினம் நடந்த வாகன விபத்தில் 17 வயதான யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார். தியத்தலாவையிலிருந்து பண்டாரவளை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் எதிரே வந்த நோயாளர் காவு வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற நபரும், உடன் பயணித்த யுவதியும் படுகாயமடைந்த நிலையில், தியத்தலாவை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். விபத்தில் படுகாயமடைந்த யுவதி சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். (எ-இ)


## முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு

கடந்த (07.04.2021) புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப குலவிளக்கு

**அமரர் சேனாதிராஜா யோகேஸ்வரி**



அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு இன்று (28.03.2022) திங்கட் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்வதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.39, கற்குளம், கொட்டடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள பிடைவை விற்பனை நிலையத்திற்கு பழக விரும்பும். அனுபவம் உள்ள ஆண். பெண் விற்பனையாளர்கள் உடன் தேவை.

(சம்பளம் நேரில் பேசப்படும்)

077 748 8093

## உதவியாளர் தேவை

சிகிச்சை நிலையத்திற்கு பெண் உதவியாளர் தேவை.

தொடர்பு : 076 399 6505

(CS 43639) (3/6)



## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

**வரவேற்பாளர்**

தகைமை: க.பொ.த. உயர்தரம்

**சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்**

தகைமை: க.பொ.த. உயர்தரம்

ஆர்வமுள்ளவர்கள் சுயவிவரக் கோவையுடன் 28/03/2022 திங்கட்கிழமை மு.ப 09.00 மணிமுதல் ந.ப 12 மணிவரை நேரில் சமுகம்தரவும்.

உதயன் மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு



யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 120 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

சுண்டிக்குளம் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் A32 பிரதான வீதியில் இருந்து 50m நடைதூரம்.

A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன.

14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் 5 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

நல்ல தண்ணீர் கட்டுக் கிணற்றுடன் பயன்தரும் 460 தென்னைகள் உள்ளன.

**பார்வையிடும் நேரம்**

**காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை**

**ஒரு பரப்பின் விலை 450000.00,**

**தரகர் தேவையில்லை.**

தொடர்புகளுக்கு

ஜெயம்:- 077 814 7830, 077 241 7589, 077 805 1655


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org